




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 210 13.03.2026 வெள்ளிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 210 Friday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(13–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–29
பிறை: தேய்பிறை
திதி
தசமி (முழுவதும்)
நட்சத்திரம்:
பூராடம் பின்னிரவு 219 வரை
பிறகு உத்திராடம்
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 10.30–12.00 மணி
எமகண்டம்
பிற்பகல் 3.00–4.30 மணி
சூலம் –மேற்கு
நல்ல நேரம் :
காலை 6–7 மணி
மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | ஆக்கம் |
| ரிஷபம் | ஆதரவு |
| மிதுனம் | கணிவு |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | பொறுப்பு |
| கன்னி | கடமை |
| துலாம் | ஊக்கம் |
| விருச்சிகம் | நலம் |
| தனுசு | லாபம் |
| மகரம் | வரவு |
| கும்பம் | சிறப்பு |
| மீனம் | உவகை |

# துணை ராணுவப் படையினர், போலீஸார் கொடி அணிவகுப்பு

**சென்னை, மார்ச் 13:**

தமிழக சட்டப்பேரவை தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், திருவள்ளூர், பல்லாவரத்தில் நேற்று துணை ராணுவப் படையினர், போலீஸாரின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் தேதியை விரைவில் தேர்தல் ஆணையம் அறிவிக்க உள்ளது. தேதி அறிவிக்கப்பட்ட உடனேயே தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்துவிடும்.

ஆகவே, திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்தல் பணி மேற்கொள்ள துணை ராணுவப் படையினர் 90 பேர் உத்தரபிரதேச மாநிலத்தில் இருந்து சிறப்பு ரயில் மூலம் சென்னை, பெரம்பூர் ரயில் நிலையத்துக்கு கடந்த 9-ம் தேதி வருகை புரிந்தனர்.

பிறகு, அவர்கள் திருவள்ளூர் அருகே கனகவல்லிபுரம் கிராமத்தில் செயல்பட்டு வரும் காவலர் பயிற்சி பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், வாக்காளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், நேற்று திருவள்ளூரில் திருவள்ளூர் மாவட்ட காவல் கூடுதல் கண்காணிப்பாளர் கல்யாண், திருவள்ளூர் நகர காவல் ஆய்வாளர் தாமோதரன் ஆகியோர் தலைமையில் துணை ராணுவ படையினர் 90 பேர், 40 போலீஸார் பங்கேற்ற கொடி அணிவகுப்பு



நடைபெற்றது.திருவள்ளூர், ஜெ.என்.சாலையில் காமராஜர் சிலை அருகே தொடங்கிய இந்த கொடி அணிவகுப்பு திருவள்ளூர் பேருந்து நிலையம், தேரடி, மோதிலால் தெரு ஆகிய முக்கிய வீதிகள் வழியாக சென்று வடக்கு ராஜவீதி பகுதியில் முடிவுற்றது.

பல்லாவரம் சட்டப்பேரவை தொகுதிக்கு 90 துணை ராணுவத்தினர் வரவைக்கப்பட்டு, பம்மல், நல்ல தம்பி சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

### மக்கள் மத்தியில் விழிப்புணர்வு

துணை ராணுவ படையினர் போலீஸார் இணைந்து, நேற்று அனகாபுத்தூரில் 2 கிமீ தூரத்துக்கு கொடி அணிவகுப்பு நடத்தினர். பல்லாவரம் குன்றத்தூர் சாலையில், அனகாபுத்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கிய இந்த அணிவகுப்பில் 30 துணை ராணுவ படையினர், 50 போலீஸார் பங்கேற்று பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பொதுமக்கள் அச்சமின்றி தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்ற முன்வர வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தேர்தல் நேரத்தில் வன்முறையில் ஈடுபட முயலும் நபர்களுக்கும், விதி மீறல்களில் ஈடுபடுபவர்களுக்கும் ஒரு கடுமையான எச்சரிக்கையாக இந்த அணிவகுப்பு அமைந்தது.மேலும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த அணிவகுப்பு நடத்தப்பட்டது.

### மாமல்லபுரத்தில்...

செங்கை மாவட்டம், மாமல்லபுரத்துக்கு 55 வீரர்கள் கொண்ட மத்திய ரிசர்வ் காவல் படையினர் வருகை தந்துள்ளனர்.

மேலும், மத்திய ரிசர்வ் காவல் படை வீரர்கள், மாமல்லபுரம் காவல் நிலையத்திலிருந்து டிஎஸ்பி அறிவழகன் தலைமையில் பாதுகாப்பு ஒத்திகையாக கொடி அணிவகுப்பு மேற்கொண்டனர். ஐந்துரதம் வழியாக சென்று வெண்ணை உருண்டைபாறை அருகே அணிவகுப்பை நிறைவு செய்தனர்.

# ஜம்மு காஷ்மீரில் பரூக் அப்துல்லா பங்கேற்ற நிகழ்ச்சியில் துப்பாக்கி சூடு

**ஜம்மு, மார்ச் 13:**

ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல் மந்திரி பரூக் அப்துல்லா. அங்கு ஆளும் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவராக உள்ள பரூக் அப்துல்லா, முன்னாள் மத்திய அமைச்சரும் ஆவார். தற்போது முதல் மந்திரியாக உள்ள உமர் அப்துல்லாவின் தந்தையான பரூக் அப்துல்லா நேற்று ஜம்முவில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார்.திருமண நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு திரும்பும் போது, அங்கிருந்த நபர் ஒருவர் திடீரென பரூக் அப்துல்லாவை குறிவைத்து துப்பாக்கியால் சுட்டார்.

இதனை கவனித்த பாதுகாப்பு அதிகாரிகள் அந்த நபரை தள்ளிவிட்டனர்.

இதனால் நூழிலையில் பரூக் அப்துல்லா உயிர் தப்பினார். இந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தால் திருமண நிகழ்ச்சியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.துப்பாக்கிச் சூடு நடத்திய நபரை உடனடியாக அங்கிருந்த மக்கள் பிடித்து தாக்கினர்.

அங்கு இருந்த போலீசார் அவரை மீட்டு விசாரணை நடத்தினர். இதில் துப்பாக்கிச் சூடு நடத்திய நபரின் பெயர் கமல் சிங் ஜம்வால் என்பதும், அவர் ஜம்முவின் மண்டி பகுதியைச் சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது. எந்த வருத்தமும் இன்றி காணப்பட்ட அந்த நபர், இப்படியான ஒரு தருணத்திற்காக 20 ஆண்டுகளாக காத்திருந்ததாகவும் கூறினார். போலீசார் அவரிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவு செய்துள்ள ஜம்மு காஷ்மீர் முதல் மந்திரி உமர் அப்துல்லா, இசட் பிளஸ் பாதுகாப்பு கொண்ட பரூக் அப்துல்லாவை அந்த நபர் கைத்துப்பாக்கியுடன் நெருங்கியது எப்படி? என்று கேள்வி எழுப்பியுள்ளார். பரூக் அப்துல்லாவை கொல்ல முயற்சி நடைபெற்றதாகவும், கடவுள் கருணையால் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் ஜம்மு காஷ்மீர் துணை முதல் மந்திரி சுரேந்தர் சவுத்ரி கூறியுள்ளார். இந்த கொலை முயற்சிக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 12 ஆம் வகுப்பு மாணவி கொலை: 6 தனிப்படைகள் அமைப்பு

**விளாத்திகுளம், மார்ச் 12:**

குளத்தூர் அருகே காட்டுப்பகுதியில் 12 ஆம் வகுப்பு மாணவி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு கிடந்த விவகாரத்தில் குற்றவாளிகளை பிடிக்க 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக நெல்லை சரக டிஐஜி சரவணன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், குளத்தூர் அருகே வேடநத்தம் வடக்குத் தெருவைச் சேர்ந்தவர் விவசாயி சுப்புராஜ். இவரது 17 வயது மகள், குறுக்குச்சாலை அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்து வந்தார்.

தற்போது அவர் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வை எழுதி வந்தார்.

இந்த நிலையில், மார்ச் 10 ஆம் தேதி மாலை 6 மணிக்கு வீட்டின் காட்டுப்பகுதிக்கு இயற்கை உபாதைக்கு சென்றவர், வெகுநேரமாகியும் வீடு திரும்பாததால், அவரது தந்தை சுப்புராஜ் குளத்தூர் போலீஸில் புகார் அளிக்க சென்றாராம். அப்போது, அங்கிருந்த போலீஸார் பள்ளி மாணவி என்பதால் விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இதையடுத்து அவர், 11 ஆம் தேதி காலை விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இதற்கிடையே, 11 ஆம் தேதி மாலை வேடநத்தம் காட்டுப்பகுதியில் முகம் மற்றும் உடலில் காயங்களுடன் மாணவி சடலமாகக் கிடப்பதாக தெரியவந்தது.

தகவலறிந்த போலீஸார் சம்பவ இடத்துக்கு சென்று, மாணவியின் சடலத்தை கைப்பற்றி, தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூராய்வுக்காக அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து, மாணவியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள், பொதுமக்கள் குளத்தூர் - குறுக்குச்சாலை - சாலையில் மறியலில் ஈடுபட்டனர். பள்ளி மாணவி காட்டுப் பகுதியில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு கிடந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில், மாணவி கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் குற்றவாளிகளை பிடிப்பதற்காக 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகள் ஆய்வு உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப ரீதியாலான விசாரணையும் தீவிரப்பட்டுள்ளதாக நெல்லை சரக டிஐஜி சரவணன் தெரிவித்துள்ளார்.

# இன்று முதல் ஏர் இந்தியா விமான கட்டணம் அதிகரிப்பு

**சென்னை, மார்ச் 13:**

ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் போர் காரணமாக, விமான எரிபொருள் விலை அதிகரித்துள்ளதால், ஏர் இந்தியா நிறுவனம் விமானக் கட்டணங்களை உயர்த்தியுள்ளது. இந்த கட்டண உயர்வு இன்று முதல் அமலுக்கு வருகிறது.

இது தொடர்பாக ஏர் இந்தியா விமான நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

### 3 கட்டமாக கட்டணம் உயர்வு

உள்நாடு மற்றும் சர்வதேச விமானங்களின் பயணிகள் கட்டணம் 3 கட்டமாக அதிகரிக்கப்படுகிறது.அதன்படி, முதல் கட்டமாக மார்ச் 12-ம் தேதி (இன்று) அதிகாலை முதல் உள்நாடு மற்றும் சார்க் நாடுகளான இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூடான் செல்லும் சர்வதேச விமானங்களுக்கு ரூ.399 கட்டணம் உயர்த்தப்படுகிறது.

### பயணிகள் அதிர்ச்சி

மேற்கு ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளுக்கு 10 அமெரிக்க டாலர் (ரூ.920), தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு 20 டாலர் (ரூ.1,840), ஆப்பிரிக்க நாடுகளுக்கு, 30 டாலர் (ரூ.2,760) கட்டணம் உயர்த்தப்படுகிறது.

இந்தியாவில் இருந்து சிங்கப்பூருக்கு இயக்கப்படும் விமானங்களுக்கு எரிபொருள் கட்டணம் வசூலிக்கப்படாமல் இருந்தது. இனிமேல் அந்த கட்டணம் வசூலிக்கப்படும்.

2-ம் கட்ட கட்டண உயர்வு 18-ம் தேதி அதிகாலை முதல் அமலாகும். ஐரோப்பிய நாடுகளுக்கு 25 டாலர் (ரூ.2,300), வட அமெரிக்காவுக்கு, 50 டாலர் (ரூ.4,594), ஆஸ்திரேலியாவுக்கு 50 டாலர் (ரூ.4,594) கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெட்ரோல், டீசல் விலை உயர்வு வதந்தி: பெட்ரோல் நிலையங்களில் குவிந்த வாகன ஓட்டிகள்!

**சென்னை, மார்ச் 13:**

பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு வதந்தி காரணமாக, தமிழகம் முழுவதும் பெட்ரோல் நிலையங்களில் வாகன ஓட்டிகள் குவிந்ததால் பரபரப்பு நிலவியது.

தற்போது அமெரிக்கா-இஸ்ரேல், ஈரான் இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக இந்தியாவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

இதனிடையே, குவைத், கத்தார், சவுதிஅரேபியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சமையல் எரிவாயு உற்பத்திக்கான திரவ சுத்திகரிக்கப்பட்ட கச்சா எண்ணெய் இறக்குமதி தடைபட்டுள்ள நிலையில், அதன் இருப்பும் மிகவும் குறைவாகவே உள்ளது.

இதனால், நாடு முழுவதும் சமையல் எரிவாயு உருளைகள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வீடுகளுக்கான சமையல் எரிவாயு உருளைகளை தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும் என்ற மத்திய அரசின் அறிவிப்பால், வணிக பயன்பாட்டுக்கான எரிவாயு உருளைகளின் உற்பத்தியை பெரும்பாலான எரிவாயு உற்பத்தி நிறுவனங்கள் முற்றிலுமாக நிறுத்தியுள்ளன.

இதன்காரணமாகசென்னை சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள உணவகங்கள், பேக்கரிகள், தேநீர் கடைகளுக்கு சமையல் எரிவாயு உருளைகள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பல ஹோட்டல்கள், கையிருப்பில் உள்ள எரிவாயு உருளைகள் மூலம் கடந்த இரு நாள்களாக உணவு பொருள்களை



தயாரித்தன. பல்வேறு இடங்களில் கையிருப்பில் உருளைகள் வைத்திராத சிறிய, பெரிய உணவகங்கள், பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன. பல உணவகங்களில் விறகு மற்றும் மின்சார அடுப்புகளுக்கு மாறத் தொடங்கியுள்ளனர்.

### பெட்ரோல் நிலையங்களில் குவிந்த வாகன ஓட்டிகள்

இந்த நிலையில், வளைகுடா நாடுகளில் போர் காரணமாக , தமிழகத்தில் கடந்த இரண்டு நாள்களாக நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நெருக்கடிக்கு மத்தியில் நாளை முதல் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு மற்றும் விலை உயரப்போவதாக புதன்கிழமை இரவு சமூக ஊடகங்களில் வைரலான வதந்திகள் பரவியது. இதனால் அச்சம் அடைந்த வாகன ஓட்டிகள் தங்களது இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களுடன் பெட்ரோல் நிலையங்களில் குவிந்தனர்.

தமிழகத்தில், வேலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் நள்ளிரவு கூடியதால் வாகன ஓட்டிகள் பீதியடைந்தனர். அதேபோன்று சென்னையில் பட்டரவாக்கம் மற்றும் அய்யப்பாகம், அம்பத்தூர், ஆவடி, வில்லிவாக்கம், அண்ணாநகர் உள்ளி பல்வேறு பகுதிகளில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் புதன்கிழமை இரவு முதல் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்குவதற்காக ஏராளமானோர் வரிசையில் நின்று தங்களது வாகனங்களின் டேங்குகளை முழுவதுமாக நிரப்பிச் சென்றதாலும், கேன், பாட்டில்களில் வாங்கிச் சென்றதால் வணிக ரீதியிலான வாகன ஓட்டிகள் பீதியடைந்தனர்.

### 90 நாள்களுக்கான பெட்ரோல், டீசல் கையிருப்பு உள்ளது

அதேநேரத்தில், நாடு முழுவதும் 90 நாள்களுக்கு போதிய அளவுக்கு எரிப்பொருள் கையிருப்பு இருப்பதால் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாது. மக்கள் பீதியடைய வேண்டாம் என தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.பி.முரளி தெரிவித்துள்ளார்.

மேலும், வதந்தியால் மக்கள் தேவைக்கு அதிகமாக பெட்ரோல், டீசல் வாங்கினால் விரைவில் காலியாகி செயற்கை தட்டுப்பாடு ஏற்படும்.

டீலர்களுக்கு கடனில் கொடுப்பதை மட்டுமே எண்ணெய் நிறுவனங்கள் நிறுத்தியுள்ளன என்று அவர் கூறினார்.




## ஸ்ரீபெருமாள்- வேணுகோபாலன் திருக்கோலம்.



மேற்கு மாம்பலம் – ஸ்ரீ பாஷ்யகார ஸ்ரீசெங்கமலவல்லி நாயிகா ஸமேத சென்ன ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் விசுவாவசு வருஷ மாசி ப்ரம்மோத்ஸவம். ஆறாம் நாள் காலை ஸ்ரீபெருமாள்- வேணுகோபாலன் திருக்கோலம்.

## நூல் வெளியீட்டு விழா!



**தேனி, மார்ச் 13:** தேனி அருகிலுள்ள பூதிப்புரத்தில் நண்பர்கள் நட்பு வட்டம் சார்பில், உலகிலேயே முதன் முதலில்... எனும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. பணி நிறைவு பெற்ற காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் த. காந்த சொரூபன் தலைமையில் போ. சிதம்பரம், விடியல் வீரா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் பணி நிறைவு பெற்ற சென்னை மாவட்ட நீதிபதி க. பரமராஜ் நூலினை வெளியிட, வழக்கறிஞர் எம்.கே.எம். முத்துராமலிங்கம், எழுத்தாளர் தேனி மு. சுப்பிரமணி, திரைப்பட நடிகை திண்டுக்கல் தனம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். புலவர் இளங்குமரன், அ.பாண்டிய மகிழன், மு. அன்புக்கரசன், ஜி.கே. மணிகார்த்திக், கேரளபுத்திரன், எஸ்.ஆர். சிக்கையன் ஆகியோர் நூல் குறித்துப் பேசினர். நூலாசிரியர் கவிஞர் ம. கவிக்கருப்பையா ஏற்புரை வழங்கினார். முன்னதாக, நேசம் பி. முருகன் வரவேற்றார். முடிவில் பி.டி..ஆறுமுகம் நன்றி தெரிவித்தார். விழா நிகழ்வினை வே. சிதம்பரநாதன் தொகுத்து வழங்கினார்.

## இளையான்குடி மேல்நிலைப் பள்ளியில் பொதுத்தேர்வு எழுதும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு பாராட்டு







**சிவகங்கை, மார்ச் 13:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடி மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து பேனா பென்சில் சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் மாணவர்களின் நலன் கருதி மாணவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து பாராட்டி மிகவும் மாணவர்களுக்கு பயனுள்ள பொருட்களை வழங்கினார் . பள்ளித்தலைமை ஆசிரியர் முஹம்மது இலியாஸ் உதவிதலைமையாசிரியர் சேக் உதுமான் ஆசிரியர் ஜாஹிர் அஸ்மான் அலி ஆகியோர் முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

## குடிநீர் திட்டம் விரைவுபடுத்த கவுன்சிலர்கள் கோரிக்கை



**மானாமதுரை,மார்ச் 13:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் குடிநீர் திட்டம், புதிய குப்பை கிடங்கு அமைக் கும் திட்டம் ஆகியவற்றை விரைவாக செயல்படுத்த எடுக்க ராட்சி கூட்டத்தில் கவுன் நடவடிக்கை வேண்டுமென பேரூ சிலர்கள் வலியுறுத்தினர்.

இளையான்குடி பேரூராட்சி கூட்டம் தலைவர் நஜிமுதீன் தலைமையில் நடந்தது. துணைத் தலைவர் இப்ராஹிம் முன் னிலை வகித்தார். செயல் அலுவலர் கவிதா வர வேற்றார்.

தலைமை எழுத்தர் கணேசன் தீர்மானங்களை வாசித்தார்.

குடிநீர் திட்டத்தை விரை அ.தி.மு.க., கவுன்சிலர் நாகூர் மீரா,தி.மு.க., கவுன் சிலர் செய்யது ஜமீமா ஆகியோர் பல செலவில் இளையான்குடி யில் அம்ரூத் திட்டத்தின் கீழ் புதிதாக துவக்கப்பட்ட கோடி வாக செயல்படுத்தவும், குப்பை கிடங்கை யாருக் இடத்தில் மாற்ற வேண்டு மென வேண்டுகோள் விடுத்தனர். கும் தொந்தரவு இல்லாத கூட்டத்தில் துப்புரவு ஆய்வாளர் தங்கதுரை பேரூராட்சி கவுன்சிலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## கேஸ் விலை உயர்வு மற்றும் சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்து மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட்டம்



**ஈரோடு, மார்ச் 13:** ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் மொடக்குறிச்சி நால் ரோட்டில் கேஸ் விலை உயர்வு மற்றும் சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்து மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் K.P.முத்துக்குமார் அவர்கள் தலைமையில் 11.03.2026 புதன்கிழமை மாலை 4.00 மணி அளவில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர் களாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் R.M.பழனிசாமி அவர்களும் முன்னாள் மாவட்ட தலைவர் மக்கள் ஜி.ராஜன் அவர்களும் மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர் L.P.பாலசுப்பிரமணியம், N.K.தங்கவேல், வட்டாரத் தலைவர்கள் கதிர்வேல், ஈஸ்வரமூர்த்தி, ஓ.சி.சண்முகம், கோபாலகிருஷ்ணன், டிஸ்கோ முருகேஷ், சர்வேஸ்வரன், மனோஜ் குமார், வேலுசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் வடுகபட்டி பேரூராட்சித் தலைவர் விசுவநாதன், நகரத் தலைவர் பசீராபேகம், மாவட்ட நிர்வாகிகள் நல்லாம்பட்டி நடராஜ், M.S.வாசுதேவன், சீதாபதி, M.K.மணி, ராஜ்குமார், கண்டிக்காட்டுவலசு ரமேஷ், பேரூர் தலைவர்கள் லோகு, கௌரிபாலாஜி, கணேஷ் ராம், தங்கவேல், சுந்தரம், விவசாயப் பிரிவு மாவட்ட தலைவர் கிருஷ்ணன், விளையாட்டு பிரிவு மாவட்டத் தலைவர் பிரபு, கௌதம், முத்து, நல்லசிவம், மாவட்ட துணைத்தலைவர் தில்லை சிவக்குமார் மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தின் முக்கியமான பல நண்பர்கள் என திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நன்றி! வணக்கம்!

## கெங்கநல்லூர் ஊராட்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா: அமைச்சர் காந்தி பங்கேற்பு!

**வேலூர், மார்ச் 13:** வேலூர் தெற்கு மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி கெங்கநல்லூர் ஊராட்சியில் மறைந்த முன்னாள் திமுக தலைவர் கலைஞர் திடலில், திமுக தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி தி.மு.க., சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் மிக பிரமாண்டமாக நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக ராணிப்பேட்டை மாவட்ட திமுக செயலாளர் மற்றும் கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி 2500 பெண்களுக்கு - இலவச புடவை, 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு - சீருடை , 200 இளைஞர்களுக்கு- விளையாட்டு கிட் (Sports Kit) , 100 நபர்களுக்கு - தையல் இயந்திரம், சலவை தொழிலாளர்களுக்கு - சலவை பெட்டி (Iron Box),





சலூன் கடை தொழிலாளர்களுக்கு சவரப்பெட்டி, 100 நடைபாதை வியாபாரிகளுக்கு - தள்ளுவண்டி ஆகியவை வழங்கினார்.

இதில் வேலூர் மாநகர செயலாளர் மற்றும் எம்எல்ஏ ப.கார்த்திகேயன், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா, மத்திய ஒன்றிய செயலாளர் பி.வெங்கடேசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் கோ.குமரபாண்டியன், வேலூர் ஒன்றிய செயலாளர் சி. எல். ஞானசேகரன், கணியம்பாடி தெற்கு ஒன்றிய செயலாளர் என். கஜேந்திரன், அல்லாபுரம் பகுதி செயலாளர் சி. எம். தங்கதுரை, தொரப்பாடி பகுதி செயலாளர் ஆர். கே. ஐயப்பன், பேரூராட்சி செயலாளர்கள் பி. அருள் நாதன், எம்..ஜாகீர் உசேன், ஆர்.பெருமாள் ராஜா, உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு ஆரத்தி



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

## மத்திய அரசை கண்டித்து சிலிண்டருக்கு மாலை அணிவித்து சிபிஎம் ஆர்ப்பாட்டம்





**கோவை, மார்ச் 13:** மத்திய கிழக்கு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே 14.2 கிலோ எடை கொண்ட கியாஸ் சிலிண்டரின் விலையை மத்திய அரசு திடீரென ரூ.60 உயர்த்தி உள்ளது. மேலும், வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை 115 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், வணிக சிலிண்டர் தட்டுப்பாடு நிலவுவதால் பல உணவகங்கள் மூடப்படும் நிலைக்கு ஆளாகியுள்ள.

வணிக சிலிண்டர் தட்டுப்பாடு நிலவும் நிலையில், மத்திய அரசை கண்டித்து கோவையில் காலி சிலிண்டருக்கு மாலை அணிவித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## மானாமதுரை நகராட்சி பகுதியில் 27 வார்டுகளில் பேவர் பிளாக் சாலை புதுபிக்க பூமி பூஜை



**மானாமதுரை,மார்ச் 13:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி பகுதியில் உள்ள 27 வார்டுகளில் பேவர் பிளாக் சாலைகள் 3 கோடி மதிப்பிட்டில் புதுப்பித்தல் பணிக்கு பூஜை செய்து பணிகள் தொடங்கியது. நிகழ்வில் துணை தலைவர் பாலசுந்தரம், திமுக நகர் செயலாளர் பொன்னுசாமி, நகராட்சி ஆணையாளர், கோபால கிருஷ்ணன் பொறியாளர் பட்டு ராஜன் மற்றும் கவுன்சிலர் ஒப்பந்தக்காரர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு மாணவி படுகொலை: செல்வப்பெருந்தகை கண்டனம்



**தூத்துக்குடி, மார்ச் 13:** தூத்துக்குடி மாவட்டம், குளத்தூர் அருகே வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 17வயது அரசு பள்ளியில் பயிலும் மாணவி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. பாதுகாப்பாக இருக்க வேண்டிய சமூகத்தில் இவ்வாறான மனிதாபிமானமற்ற செயல்கள் நடைபெறுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இந்த சம்பவம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து அதிகம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, கடுமையான தண்டனை வழங்குவதன் மூலம் இத்தகைய குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மாணவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அரசு தேவையான அனைத்து உதவிகளையும், ஆதரவையும் உடனடியாக வழங்க வேண்டும்.

மேலும், பெண்கள் மற்றும் மாணவிகள் பாதுகாப்பாக வாழும் சூழலை உருவாக்க அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் விரைவான மற்றும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய கொடூர சம்பவங்கள் மீண்டும் நடைபெறாதவாறு கடுமையான கண்காணிப்பும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் உறுதி செய்யப்பட வேண்டும்.

தூத்துக்குடி மாணவிக்கு நடந்த இந்த மனிதநேயமற்ற பாலியல் பலாத்காரச் சம்பவத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன். குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி, கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு பார்சல் டீ, காபி விலை உயர்வு





**சேலம், மார்ச் 13:** அமெரிக்கா-ஈரான் போர் காரணமாக உலகம் முழுவதும் கியாஸ், பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழகத்திலும் பல்வேறு இடங்களில் வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு கடுமையாக ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சேலம் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஓட்டல்கள், டீ கடைகள், பேக்கரிகள் மூடும் நிலை உருவாகி உள்ளது.

இந்த நிலையில் ஒரு சில ஓட்டல்கள் விறகு அடுப்பில் சமைக்க தொடங்கி விட்டனர். சில ஓட்டல்களில் விறகு அடுப்பு கட்டும் பணியும் நடந்து வருகிறது.

இந்த நிலையில் சேலத்தில் உள்ள பெரும்பாலான டீக்கடைகளில் இன்று முதல் திடீரென டீ, காபி விலை உயர்ந்துள்ளது. அதன்படி அரை பார்சல் டீ இதுவரை ரூ. 20-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் ரூ.10 அதிகரித்து 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.


மேலும் ஒரு பார்சல் டீ இதுவரை ரூ.30-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் ரூ.10 அதிகரித்து ரூ. 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதே போல் ஒரு சில கடைகளில் பலகாரங்கள் விலையும் அதிகரித்துள்ளனர்.

இது குறித்து வாடிக்கையாளர் களுக்கு தெரியும் வகையில் டீக்கடைகள் முன்பு அறிவிப்பு ஒட்டப்பட்டுள்ளது.

## திருப்பூரில் தேங்கி கிடக்கும் ரூ.300 கோடி மதிப்புள்ள ஆடைகள்

**திருப்பூர், மார்ச் 13:** ஈரான் - இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இடையே நிலவும் போர் சூழல் காரணமாக கப்பல் போக்குவரத்து தடையால் திருப்பூர் ஆடை ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தியான ரூ. 300 கோடி மதிப்பிலான ஆடைகள் திருப்பூரிலேயே தேக்கமடைந்துள்ளதாக ஏற்றுமதியாளர்கள் தெரிவித் துள்ளனர்.

இது குறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் சுப்பிரமணியன் கூறுகையில், துபாய் வழியாக







அரபு நாடுகளுக்கு செல்லும் பின்னலாடைகள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது ஈரான் ஹார்முஸ் ஜலசந்தி கடல்வழி பாதையை அடைத்து வைத்துள்ளதால் கப்பல்கள் மாற்று பாதையில் சுற்றிச்செல்ல 20 நாட்கள் கூடுதல் அவகாசம் தேவைப்படும். இதனால் செலவுகள் அதிகரிக்கும்.

பதற்றமான சூழலில் சரக்கை அனுப்ப வேண்டாமென, வர்த்தகர்கள் கூறிவிட்டனர். ரம்ஜான் பண்டிகை விற்பனைக் கான ஆடைகளை கடந்த மாதங்களில் அனுப்பிவிட்டோம் என்றார்.

திருப்பூர் நிட்பிரின்டர்ஸ் அசோசியேஷன் (டெக்பா) தலைவர் காந்த் கூறுகையில், "பிரின்டிங், சாய ஆலைகள், 'ஹீட் செட்டிங்' 'பினிஷிங்', சென்டர் போன்ற பிரிவுகளில், கியாஸ் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. பின்னலாடை தயாரிப்பில் கியாஸ் பயன்பாடு தவிர்க்க இயலாதது.கியாஸ் சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், சில 'ஜாப் ஒர்க்' பிரிவுகளில் உற்பத்தி முடங்கும் அபாயம் உள்ளது. மின்சாரத்தை பயன்படுத்தினால் உற்பத்தி செலவு அதிகரிக் கும்.

பின்னலாடை தொழில்துறையினருக்கு தடையின்றி கியாஸ் கிடைக்க மத்திய அரசு ஆவணம் செய்ய வேண்டும்" என்றார்.



































## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424















## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588






## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!



அத்தனை
மன சுமைகளுக்கும்
உன் அரவணைப்பு
ஒன்றே போதுமானதாக
இருக்கிறது
என் ஆறுதலுக்கு

நீ என் வாழ்வின்
பாதியில் அதிசயம்
மீதியில் ரகசியம்

நான் கேட்டு ரசித்த
கவிதைகளும்
அவள் சொல்ல விரும்பிய
வார்த்தைகளும்
அவளின் இரு
விழிகளுக்குள்
புதையல்களாய்
கொட்டி கிடக்கின்றன

உன்னிடத்தில்
மிண்டும் உரையாடலை
தொடங்குவதற்கு
உனை என்னிடத்தில்
தக்கவைப்பதற்கு
இதுவும்
ஒரு புத்திசாலித்தனமான
முட்டாள்தனம்

## வாழ்க்கை தத்துவம்...



ஒவ்வொரு முறையும் அன்பை
நிருபித்துக் கொண்டே இருக்க
முயற்சி செய்யாதீர்கள் அது
தற்கொலையை விட கேவலமானது

அன்பானவர்களுக்காக
இறங்கி போவதும் தவறில்லை
நம் அன்பு புரியாதவர்களிடம்
விலகி போவதும் தவறில்லை

எதையும் மனம் விட்டு
பேசாத வரை எல்லாம்
மன அழுத்தமே

எதையும் மறக்க முயற்சித்து
நிம்மதியை இழக்காதீர்கள்
அதை அதை அப்படியே
விட்டு விடுங்கள்
காலம் மாற்றிவிடும்

# வங்கியும்... வாரிசும்!




நம்ம சிவகுருநாதன், ஒரு காலத்தில் ஒரு பெரிய வங்கியின் கிளை மேலாளராக இருந்து ஓய்வு பெற்றவர். வங்கிப் பணியிலேயே ஊறிப்போனதால், வீட்டில் கூட 'சீல்' வைப்பதும், 'கேஒய்சி' (KYC) கேட்பதுமாகத்தான் இருப்பார்.

அவருக்கு ஒரு பேரன், பெயர் ராகுல். இப்போதுதான் எட்டாம் வகுப்பு படிக்கிறான். ஒருமுறை ராகுல் அவனுடைய அரையாண்டுத் தேர்வு மதிப்பெண் அட்டையில் (Report Card) கையெழுத்து வாங்க சிவகுருநாதனிடம் வந்தான்.

சிவகுருநாதன் அந்த ரிப்போர்ட் கார்டை வாங்கிப் பார்த்தார். அதில் கணக்கு (Maths) பாடத்தில் ராகுல் 100-க்கு 35 மதிப்பெண்கள் எடுத்திருந்தான். சிவகுருநாதனுக்குள் இருந்த பழைய மேலாளர் எட்டிப் பார்த்தார். உடனே ராகுலைப் பார்த்து, "என்னடா இது? பார்டர் மார்க் வாங்கியிருக்க? ஒழுங்காப் படிக்கக் கூடாதா?" என்று அதட்டினார்.

ராகுல் சளைக்காமல் சொன்னான், "தாத்தா, இதுவும் வங்கி முறைப்படி தான்!" சிவகுருநாதன் புரியாமல், "அது எப்படிடா?" என்று கேட்டார்.

ராகுல் சிரித்துக்கொண்டே சொன்னான்: "தாத்தா... 100 ரூபாய்க்கு 35 ரூபாய்னா அது வெறும் 'பாஸ்' மார்க் கிடையாது... அது 'பிரைாரிட்டி செக்டார் லெண்டிங்' (Priority Sector Lending)! அதாவது, பின்தங்கிய நிலையில இருக்கிற எனக்கு, நீங்க ஒரு 'கன்செஷன்' (Concession) கொடுத்து கையெழுத்து போடணும்!"

சிவகுருநாதன் அசந்துபோனார். சரி, ஏதாவது புத்திமதி சொல்லலாம் என்று நினைத்து, "சரி, மத்த சப்ஜெக்ட்ல ஏன் மார்க் கம்மி?" என்று கேட்டார்.

ராகுல் உடனே சொன்னான், "அதாத்தா... போன மாசம் 'சர்வர் டவுன்' (Server Down) ஆன மாதிரி, எக்ஸாம் அப்போ என் 'மெமரி' சர்வர் டவுன் ஆயிடுச்சு. அதான் டேட்டா ரீட்ரீவ் (Data Retrieve) பண்ண முடியாம அவுட்-ஆஃப்-பேலன்ஸ் ஆகிடுச்சு!"

இதைக்கேட்ட சிவகுருநாதன், "சரிடா, இந்த ரிப்போர்ட் கார்டுல நான் கையெழுத்து போட்டுட்டா நீ எனக்கு என்ன தருவ?" என்று கிண்டலாகக் கேட்டார்.

ராகுல் பக்கென்று சொன்னான், "இதுக்கு ஏன் தாத்தா லஞ்சம் கேக்குறீங்க? இது 'நோ-பிரில்ஸ்' (No-Frills Account) அக்கவுண்ட் மாதிரி வெறும் கையெழுத்து தானே! வேணும்னா என் அடுத்த மாச பாக்கெட் மணியை 'ஆர்டி' (RD) கட்டிடுறேன், நீங்க மெச்சூரிட்டி அப்போ வட்டியோட சேர்த்து கொடுத்துடுங்க!"

சிவகுருநாதன் சிரித்துக்கொண்டே சொன்னார், "உன் புத்தி நேரா வங்கிப் பக்கம் தான் போகுது. ஆனா ஒன்னு ராகுல், இந்த மார்க் லிஸ்ட்ல நான் கையெழுத்து போட்டா, அது 'என்பிஏ' (NPA - Non Performing Asset) மாதிரி ஆகிடக் கூடாது. அடுத்த எக்ஸாம்ல 'ப்ராஃபிட்' (Profit) அதிகமா வரணும், புரியுதா?"

**வெ.நாராயணன்**
லால்குடி

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*நபர் 1: ஏன் எப்பவும் போனும் கையுமா இருக்க, மனுசங்களோடவும் பழகலாம்ல..*

*நபர் 2: நான் சொன்னத கேக்குது, கேட்டதை தருது.. பிடிச்சா மாதிரி நடந்துக்குது.. மனுசங்ககிட்ட இதெல்லாம் எதிர்பார்க்க முடியுமா?*



# தினம் ஒரு சமையல்



## முட்டை குருமா

**தேவையான பொருட்கள்:**

*பெரிய வெங்காயம் -2*
*தக்காளி -1*
*தேங்காய் எண்ணெய் -4 டேபிள் ஸ்பூன்*
*முட்டை -2*
*பட்டை -1 துண்டு*
*ஏலக்காய் -3*
*கிராம்பு -2*
*இஞ்சி பூண்டு பேஸ்ட் -1 டேபிள் ஸ்பூன்*
*மஞ்சள் தூள் -1/4 டீஸ்பூன்*
*மிளகாய்த்தூள் -1 டீஸ்பூன்*
*மல்லித்தூள் -1 டீஸ்பூன்*
*கரம் மசாலா -1/4 டீஸ்பூன்*
*உப்பு -தேவையான அளவு*
*தேங்காய் -1/4 மூடி*

**செய்முறை:**



ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி பட்டை கிராம்பு, ஏலக்காய் சேர்த்து வெடித்ததும் வெங்காயம் சேர்த்து வதக்க வேண்டும்

வெங்காயம் வதங்கிய இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து வதக்க வேண்டும் இஞ்சி பூண்டு வதங்கியதும் தக்காளி சேர்த்து வதக்க வேண்டும்

தக்காளி நன்கு வதங்கியதும் மஞ்சள்தூள் மிளகாய்த்தூள், மல்லித்தூள் கரம் மசாலா, உப்பு சேர்த்து வதக்கி தேங்காயை நைசாக அரைத்து சேர்த்து தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும்

குருமா நன்கு கொதித்ததும் இரண்டு முட்டையை அதில் உடைத்து ஊற்றி சிம்மில் வைத்து பத்து நிமிடம் வேக விடவும் 10 நிமிடம் கழித்து முட்டையை திருப்பிப் போட்டு அடுப்பை அணைத்து விடவும் இப்போது முட்டை குருமா பரிமாறு தயார்.

## வசம்பு பயன்கள்



குழந்தைகளுக்கு வசம்பு ஏன் தரப்படுகிறது தெரியுமா? வசம்புவுடன் என்னென்ன பொருட்களை சேர்த்து சாப்பிட்டால், என்னென்ன உடல்நல பாதிப்புகள் குணமாகும் தெரியுமா? இயற்கை மூலிகையான வசம்புவை பற்றி சுருக்கமாக பார்ப்போம்..!!!

வசம்பு என்றாலே அது குழந்தைகளுக்கான மருந்து என்று பலரும் நினைத்து கொண்டிருக்கிறார்கள்.. ஆனால், பெரியவர்களுக்கும் மருந்தாகி பலவித உடல்நலகோளாறுகளை இந்த வசம்பு குணப்படுத்துகிறது.

அஜீரணம்: குழந்தைகளுக்கு அஜீரணம், மந்தம் இருந்தால், நம்முடைய முன்னோர்கள் இந்த வசம்புவைதான் மருந்தாக தருவார்கள்.. இப்படி வயிற்றுக்கு மருந்தாக தரும்போது, அரை மணி நேரத்துக்கு குழந்தைகளுக்கு பால் கொடுக்க வேண்டாம் என்பார்கள்..

அதேபோல, குழந்தைகள் தூங்கும் அறையில் பூச்சிகள் இருந்தால், அந்த அறையை சுற்றிலும், வசம்பு பொடியையும் ஆங்காங்கே தூவி வைத்துவிடுவார்கள்.. இதனால் பூச்சிகள் முதல் நுண்ணுயிரிகள் நுழைவது தடுக்கப்படும். குழந்தைகளை குளிக்க வைக்கும்போதுகூட, அந்த தண்ணீரில் வசம்பு பொடியை கலந்து பயன்படுத்துவார்கள்.

தோல் நோய்கள்: கைக்குழந்தைகளின் கைகளில் தாயம் போல இந்த வசம்பினை திருஷ்டி கயிறாக கட்டிவிடுவார்கள்.. இதனால், தோல் நோய்த்தொற்றுகள், ஒவ்வாமை, சரும தடிப்புகள் குழந்தைகளுக்கு வராது. பூச்சிகளும் குழந்தைகளை நெருங்காது.

அதேபோல, வசம்பை தீயில் கரி போல சுட்டு, அந்த எரிந்த வசம்பை தண்ணீரில் தேய்த்து, அந்த விழுதினை குழந்தைகளுக்கு திருஷ்டி பொட்டாக, கண் மை போல வைப்பார்கள். குழந்தைகளின் கன்னம், உள்ளங்கை, உள்ளங்கால்களிலும் இதனை பொட்டு போல வைத்தால் தொற்றுகள் நெருங்காமல் இருக்கும். அதனால்தான், வசம்புவிற்கு, பிள்ளை மருந்து, பிள்ளை வளர்த்தி என்றெல்லாம் பெயர்கள் உள்ளன. சில குழந்தைகள் உரிய பருவம் வந்தும், சரிவர பேச்சு வராமல் இருந்தால், வசம்புவை குழைத்து நாக்கில் தடவினால் தீர்வு கிடைக்கும்.

# கணவரை விவாகரத்து செய்த நடிகை ஹன்சிகா மோத்வானி... ஜீவனாம்சம் எவ்வளவு தெரியுமா?



தமிழ் சினிமாவில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு முன்னணி நடிகையாக வலம் வந்தவர் தான் ஹன்சிகா மோத்வானி. 2000களில் வெளியான ஷக்கலக்க பூம் பூம் என்ற தொடரில் குழந்தை நட்சத்திரமாக நடித்திருந்தார், அதன்பின் சில ஆண்டுகள் கழித்து ஹிந்தியில் கதாநாயகியாக அறிமுகமானார்.

ஹிந்தியை தொடர்ந்து தெலுங்கிலும் நடித்து வந்தவர் கடந்த 2011ம் ஆண்டு தனுஷின் மாப்பிள்ளை படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார்.

அதன்பின் வேலாயுதம், அரண்மனை, ரோமியோ ஜூலியட், சிங்கம் 2 என தொடர்ந்து பல்வேறு வெற்றிப் படங்களில் நடித்து வந்தார்.

நடிகை ஹன்சிகா கடந்த 2022ம் ஆண்டு மும்பையைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் சோஹேல் கதுரியா என்பவரை காதலித்து திருமணம் செய்தார்.

ஆனால் திருமணம் ஆன சில வருடங்களிலேயே ஹன்சிகா-சோஹேல் திருமண வாழ்க்கையில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டது. தற்போது மும்பை பந்தாரா குடும்பநல நீதிமன்றம் இந்த தம்பதிக்கு பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் விவாகரத்தை வழங்கியுள்ளனர்.

ஹன்சிகா தனது விவாகரத்து விஷயத்தில் கணவர் சோஹேல் கதுரியாவிடம் இருந்து ஜீவனாம்சமாக எதுவும் கேட்கவில்லை என்று கூறப்படுகிறது.

## சினிமா



சென்சேஷன் நடிகையாக வலம் வரும் க்ரித்தி ஷெட்டி தற்போது பிங்க் நிற உடையில் அழகிய போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்து இருக்கிறார்.

ரசிகர்களை கவர்ந்து வரும் அழகிய ஸ்டில்கள் இதோ பாருங்க.

# தனுஷுடன் இணைந்த சென்சேஷனல் தென்னிந்திய நடிகை.. முதல் முறையாக இணையும் ஜோடி



தமிழ் சினிமாவை தாண்டி இன்று ஹாலிவுட் வரை ரீச் ஆகியிருக்கும் நடிகர் தனுஷ். இவர் நடிப்பில் அடுத்ததாக கர என்கிற திரைப்படம் வெளிவரவுள்ளது. இப்படத்தை இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கி வருகிறார். இப்படத்தில் தனுஷுக்கு ஜோடியாக நடிகை மமிதா பைஜூ நடித்துள்ளார். சமீபத்தில் இப்படத்தின் டீசர் ஒன்று வெளிவந்து ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.


இப்படத்தை தொடர்ந்து தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் படம் D55. இப்படத்தை ராஜ்குமார் பெரியசாமி இயக்க சாய் பல்லவி, ஸ்ரீலீலா ஆகியோர் இப்படத்தில் நடிக்கின்றனர். சாய் அப்யங்கர் இப்படத்திற்கு இசையமைக்கிறார்.

இந்த இரண்டு திரைப்படங்கள் மட்டுமின்றி தனுஷ் கைவசம் உள்ள அடுத்த படம்தான் D56. இப்படத்தை லப்பர் பந்து பட இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து இயக்குகிறார்.

இதற்கான அறிவிப்பு விரைவில் வெளிவரவிருக்கும் நிலையில், இப்படத்தில் தனுஷுடன் இணைந்து தென்னிந்திய சென்சேஷனல் நடிகை ருக்மிணி வசந்த் நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் மூலம் முதல்முறையாக தனுஷுக்கு ஜோடியாக ருக்மிணி வசந்த் நடிக்கவிருக்கிறார்.

மேலும் இயக்குநர் விஜய் குமார் இப்படத்தில் வில்லனாக நடிக்கவிருப்பதாகவும் அனிருத் இப்படத்திற்கு இசையமைக்கப்போவதாகவும் தகவல் தெரிவிக்கின்றனர்.

# சிவ மகாபுராணம் படிப்பதால் கிடைக்கும் பயன்கள் என்னென்ன தெரியுமா?



தில்லையில் ஒரு ஆனி மாதம் ஆயில்யம் நட்சத்திரம் அன்று சிவபெருமான் அந்தணர் வடிவம் தாங்கி திருநீறு பூசி மாணிக்கவாசகர் தங்கி இருந்த மடத்திற்கு வந்தார். வந்தவர் மாணிக்கவாசகர் பெருமானிடம், 'தாங்கள் எழுதிய திருவாசகத்தை நீங்கள் ஒரு முறை சொன்னால் அப்படியே ஓலைச்சுவடிகளில் அதை எழுதிக்கொள்கிறேன்' என்றார்.
உடனே மாணிக்கவாசகர் அமர்ந்து இருந்தபடியே 51 பதிகங்கள் கொண்ட திருவாசகத்தின் 658 பாடல்களையும் சொல்லச் சொல்ல சிவபெருமான் எழுதிக் கொண்டார்.
எழுதிய திருவாசகம் அடங்கிய அத்தனை ஓலைச்சுவடிகளையும் பெருமான் நடராஜர் சன்னிதி முன்பு வைத்துவிட்டு மறைந்து விட்டார்.
மறு நாள் ஆனி மாதம் மகம் நட்சத்திரத்தன்று ஆலயத்திற்கு வந்த தில்லைவாழ் அந்தணர்கள் எனப்படும் தீட்சிதர்கள் கூத்தபெருமான் சன்னிதியில் நிறைய ஓலைச்சுவடிகளைக் கண்டு திகைத்துப் போயினர்.
ஓலைச்சுவடிகள் அத்தனையையும் எடுத்துப் பார்த்த தீட்சிதர்கள், கடைசி ஓலையில் 'மாணிக்கவாசகர் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையான் எழுதியது' என கையொப்பம் இடப்பட்டிருந்தது. மீண்டும் திகைத்துப் போய், பெருமானின் கருணையை எண்ணி வியந்த அந்தணர்கள் மாணிக்கவாசகர் தங்கி இருந்த இடம் சென்று நடந்தவற்றைக் கூறி அவரை அழைத்து வந்தார்கள்.
ஓலைச்சுவடிகளில் உள்ள ஒவ்வொரு திருவாசகப் பாடலையும் பார்த்து கடைசியில் பெருமானது ஒப்பத்தையும் கண்டு பிரமித்தவராய், 'ஆம் அடியேன் சொல்ல எழுதப்பட்டதுதான்' என்று சொல்லி, வந்தது பெருமான்தான் என நினைத்து உள்ளம் உருகி கண்ணீர் சொரிந்தார். தீட்சிதர்கள், மாணிக்கவாசகரிடம் ஓலைச்சுவடியில் உள்ள திருவாசகத்திற்கு பொருள் கூறுமாறு வேண்டினர். அதைக்கேட்ட மாணிக்கவாசகர் மந்தகாசப் புன்னகையுடன் நடனக் கோலத்தில் இருக்கும் நடராஜப்பெருமானைக் காட்டி, 'இப்பாடல்கள் அனைத்துக்கும் இவர்தான் பொருள்' என்றார்.

அப்படி மாணிக்கவாசகர் கூறியதும், ஈசன் அங்கே ஒளி வடிவாய் காட்சியளிக்க, அதை நோக்கி உள்ளே சென்ற மாணிக்கவாசகர், சிவபெருமானிடம் இரண்டறக் கலந்து விட்டார்.
'நமசிவாய' என்னும் ஐந்து எழுத்தில் திருவாசகத்தின் முதல் பதிகமான சிவ புராணம் தொடங்குகிறது. சிவ புராணத்தின் முதல் ஆறு வரிகள் 'வாழ்க' என முடியும். அதையடுத்த ஐந்து வரிகள் 'வெல்க' என முடியும். அடுத்த எட்டு வரிகள் 'போற்றி' என முடியும். இப்படி, 6 - 5 - 8 என அமைந்திருப்பது திருவாசகத்தின் 658 பாடல்களைக் குறிக்கிறது. சிவ மகாபுராணத்தின் 32வது வரியில், 'மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' எனப் பாடி இருப்பார். இது மாணிக்கவாசகர் 32 வயதில் முக்தி அடைந்ததை சூட்சமமாக குறிப்பதாகும்.
திருவாசகத்தின் 18வது வரியான, 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்று படிப்பவர் அனைவர் மனதையும் உருக்குவதாக இருக்கும்.
ரமண மகரிஷி திருவண்ணாமலையில் தமது தாயார் உடல் நலமின்றி இருந்த கடைசி நாளில் அன்னை அருகே அமர்ந்து தொடர்ந்து திருவாசகம் படித்தார். அன்று இரவே அவரது அன்னை முக்தி அடைந்தார்.
காஞ்சி மகாபெரியவரிடம் குழந்தை இல்லாத ஒரு தம்பதி சென்று தங்கள் குறையை அவரிடம் கூறினர். மகாபெரியவர் திருவாசக புத்தகம் ஒன்றைக் கொடுத்து ஒரு குறிப்பிட்ட பதிகத்தை தினமும் படிக்கச் சொன்னார். அதைத் தொடர்ந்து அவர்களுக்கு வரிசையாக ஆறு குழந்தைகள் பிறந்தன. சிவ மகாபுராணத்திற்கு இத்தனை மகிமைகள் உள்ளன.

தகவல்:
**முனைவர் இராம.வேதநாயகம்.**

## தினம் ஒரு தலைவர்கள் — எஸ்.ஓ.கே.உபைதுல்லா வரலாறு

டான் ஸ்ரீடத்தோ டாக்டர் எஸ்.ஓ.கே. உபைதுல்லா காதிர் பாஷா D.P.M.S. J.M.N (ஆங்கிலம்: (பிறப்பு: ஜூன் 18, 1918 - இறப்பு: ஜனவரி 21, 2009) மலேசிய இந்திய காங்கிரசின் (ம.இ.கா) நிறுவனர்களில் ஒருவர். மலேசிய நாடாளுமன்றத்தின் மக்களவை துணைத் தலைவராகப் பதவி வகித்த முதல் மலேசிய இந்தியர். மலேசியாவில் முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, மூன்றாம் உலகத் தமிழ் மாநாடுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த தமிழ் ஆர்வலர். எஸ்.ஓ.கே., என்று மலேசியர்களால் அன்பாக அழைக்கப்பட்டவர்.

மலேசியாவின் மிக உயரிய மால் ஹிஜ்ரா (மலாய்: விருதைப் பெற்ற முதல் இந்தியர் எனும் பெருமை இவரைச் சாரும். நேதாஜியின் ஆசாத் இந்து இயக்கத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டு, அதன் இதழ்களின் ஆசிரியராகவும், வானொலி விமர்சகராகவும் பணியாற்றியவர். இந்திய தேசிய ராணுவத்தில் பங்கு பெற்றதற்காகச் சிறைவாசம் அனுபவித்தவர்.

சாதி சமய வேறுபாடுகள் இல்லாமல் ஏழை எளியவர்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் நிதி உதவி வழங்குவதற்காக, ஒன்றரை கோடி ரிங்கிட் மூலதனத்தில் உபைதி வாரியம் எனும் அற நிறுவனத்தை நிறுவிய டான் ஸ்ரீஉபைதுல்லா, மலேசிய இந்திய முஸ்லீம் சமுதாயத்தின் தனிப்பெரும் தலைவராகத் திகழ்ந்தவர்.

அவர் நினைவாக, மலேசியாவில் தபால் தலை வெளியிடப்பட்டிருக்கிறது. மலேசிய இந்தியர்களின் மூத்த அரசியல், சமூகத் தலைவர்களில் மிகவும் மரியாதைக்குரியவர்களில் ஒருவராக இன்றும் அவர் மதிக்கப்படுகின்றார்.

சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஆற்றிய பணிகளை நினைவு கூரும் வகையில் 2010இல் அஞ்சல் தலை வெளியிடப் பட்டது.
தஞ்சை மாவட்டம் ராஜகிரியில் காதர் பாட்சா - கதிஜா பீவி தம்பதியர்களுக்கு மகனாகப் பிறந்தார். சென்னை அரசினர் முகம்மதியா கல்லூரியிலும், பின்னர் ஜமாலியா அரபிக் கல்லூரியிலும் உயர்க் கல்வி பயின்றார். 1930இல், அதாவது தம்முடைய 12வது வயதில், இந்தியாவிலிருந்து மலேசியா, நெகிரி செம்பிலான், சிரம்பான் நகருக்கு பகுதி நேர வேலை தேடி வந்தார். அங்குள்ள ஓர் ஒட்டுக்கடையில் சாதாரண விற்பனையாளர் வேலையில் சேர்ந்தார்.

சில மாதங்களுக்குப் பிறகு மறுபடியும் தஞ்சாவூருக்குத் திரும்பி தம் உயர்க்கல்வியைத் தொடர்ந்தார். 1937இல் தம் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு மலாயா திரும்பினார்.



சிரம்பானில் உள்ள இவருடைய உறவினரின் வணிக நிறுவனத்தில் தொடக்கத்தில் பணியாற்றினார். தோள்பைகள், துணிமணிகளை விற்கும் பணியில் ஈடுபட்டார். சிக்கனமான வாழ்க்கை, எளிமையான நடைமுறை; அவை இரண்டுமே அவருடைய சிறப்பு குணநலன்களாக அமைந்தன.

சிரம்பான் வர்த்தமானி பின்னர், சிரம்பான் வர்த்தமானி என்ற தமிழ் வார இதழுக்கும், சிரம்பான் நியூஸ் எனும் ஆங்கில வார தாளிகைக்கும் ஆசிரியராகப் பணியாற்றினார். தமிழகத்தில் பி.ஏ. பட்டப் படிப்பு வரை படித்திருந்த இவருடைய எழுத்தாற்றல், அந்த ஏடுகளின் மூலம் தெரிய வந்தது. முன்னேற்றப் பாதையை நோக்கி நடைபோட இவருடைய திறமையும் விடா முயற்சியும் கைகொடுத்தன.

தமிழ், ஆங்கிலம், மலாய், உருது, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசத் தெரிந்த டான் ஸ்ரீஉபைதுல்லா, அவ்வப்போது பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை எழுதி வந்தார். அருமையான மேடைப் பேச்சாளராகவும் திகழ்ந்தார்.

நேதாஜியின் ஆசாத் இந்து இயக்கம் சென்னையில் கல்லூரி மாணவராக இருந்த போதே அவருக்கு அரசியலில் ஈடுபாடு ஏற்பட்டது. கும்பகோணத்தில் அகில இந்திய முஸ்லிம் லீக் மாநாடு நடத்திய அனுபவங்கள் அவருக்கு உண்டு. மலாயா சென்ற போதும் இந்திய நாட்டுப்பற்று அவரை விட்டு நீங்கவில்லை. மலாயா, இந்தியா ஆகிய இருநாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டார்.

நேதாஜியின் ஆசாத் இந்து இயக்கத்தில் மிகவும் ஆர்வம் காட்டினார். ஆசாத் இந்து இயக்கம் வெளியிட்ட இதழ்களின் ஆசிரியராகவும், வானொலி விமர்சகராகவும் ஆர்வத்தோடு பணியாற்றினார். இந்திய தேசிய ராணுவத்தில் பங்கு பெற்றதற்காகச் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஆசாத் ஹிந்த் சர்க்கார் அரசியல், சமூகப் பணிகளில் முனைப்பாக ஈடுபட்ட உபைதுல்லா, நேதாஜி சுபாஷ் சந்திரபோசுடன் நெருங்கிப் பழகியவர். 1940களின் தொடக்கத்தில், மலாயாவில், ஆசாத் ஹிந்த் சர்க்கார் அமைத்த போதும், இந்திய விடுதலை ராணுவப் படை தொடக்கப்பட்ட போதும், நேதாஜியுடன் நெருக்கமாக இருந்தார். அந்தக் காலகட்டங்களில் மலாயா, இந்தியா சுதந்திரத்திற்காகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். பின்னர், கோலாலம்பூருக்கு இடம் பெயர்ந்த அவர், சிறிய அளவில் விமான பயண ஏற்பாட்டு நிறுவனத்தைத் தொடங்கினார். வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறினார். விமானம், கப்பல் சரக்குகளை ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தைத் தொடங்கி அதை நீண்ட காலம் நடத்தி, நாடு போற்றும் செல்வந்தரானார்.

# தொலைக்காட்சி விளம்பரங்கள் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்: மத்திய அரசு




**புதுடெல்லி, மார்ச் 13:**

தனியார் தொலைக்காட்சி சேனல்களில் ஒளிபரப்பப்படும் அனைத்து விளம்பரங்களும் விளம்பர விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மக்களவையில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் புதன்கிழமை தெரிவித்ததாவது:

தற்போதுள்ள ஒழுங்காற்று செயல்திட்டத்தின் கீழ், தனியார் செயற்கைக்கோள் தொலைக்காட்சி சேனல்களில் ஒளிப்பரப்பாகும் அனைத்து விளம்பரங்களும், கேபிள் தொலைக்காட்சி நெட்வொர்க் ஒழுங்காற்றுச் சட்டம் 1956-இன் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள விளம்பர விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

நிரூபிக்க கடினமாக இருக்கும் வகையில், விளம்பரம் செய்யப்படும் பொருள்கள் அல்லது அதைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட, தனிச்சிறப்பான, அதிசயமான தன்மை அல்லது தரத்தை கொண்டுள்ளது என விளம்பரப்படுத்தக் கூடாது.

விளம்பர விதிமுறைகள் மீறப்பட்டது தெரியவந்தால், சம்பந்தப்பட்ட தனியார் தொலைக்காட்சி சேனல்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார்.

# சத்தீஸ்கரில் ஒரே நாளில் 108 மாவோயிஸ்ட்கள் சரண்

**ராய்ப்பூர், மார்ச் 13:**

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தார் பிராந்தியத்தில் 108 மாவோயிஸ்ட்கள் பாதுகாப்புப் படையினரிடம் நேற்று சரணடைந்தனர். இவர்களின் தலைக்கு அரசு ரூ.3.95 கோடி வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் படி, சரணடைந்தவர்களில் 8 பேர் மாவோயிஸ்ட்களின் முக்கியக் குழு உறுப்பினர்கள் ஆவர். மார்ச் 31-ம் தேதிக்குள் இந்தியாவில் மாவோயிஸத்தை முற்றிலும் ஒழிப்பதாக மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்நிலையில், பிஜப்பூர் மாவட்டத்திலிருந்து 37 பேரும், தந்தேவாடாவில் இருந்து 30 பேரும் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த மாவோயிஸ்ட்கள் அளித்த தகவலின் அடிப்படையில், அவர்கள் மறைத்து வைத்திருந்த மிகப் பெரிய ஆயுதக் கிடங்கை பாதுகாப்புப் படையினர் கண்டறிந்து பறிமுதல் செய்தனர். மாவோயிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கை வரலாற்றிலேயே இதுவே மிகப்பெரிய ஆயுதப் பறிமுதல் என்று காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 21 உறுப்பினர்களுடன் இயங்கிவந்த மாவோயிஸ்ட் மத்திய குழுவில் தற்போது 2 பேர் மட்டுமே தலைமறைவாக உள்ளனர். ஒரு சிலர் சரணடைந்துள்ளனர். மற்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கச்சா எண்ணெய் விலை மீண்டும் 100 டாலரைத் தாண்டியது!

**புதுடெல்லி, மார்ச் 13:**




ஹோர்முஸ் நீரிணையைக் கடக்க முயன்ற எண்ணெய் கப்பல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து கச்சா எண்ணெய் மீண்டும் 100 டாலரைக் கடந்துள்ளது.

ஈரான் - அமெரிக்க போரைத் தொடர்ந்து ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால், இந்த வாரத் தொடக்கத்தில் கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 100 டாலரைக் கடந்தது. இதையடுத்து, ஜி7 நாடுகள் தங்களின் அவசர கால கையிருப்பில் இருக்கும் எண்ணெய்களை வெளியிட முன்வந்ததால், கச்சா எண்ணெய் விலை 100 டாலருக்கும் கீழ் குறைந்தது.

இந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தின் கலீஃபா துறைமுகத்தில் இருந்து குஜராத் கண்ட்லா துறைமுகம் நோக்கி வந்துகொண்டிருந்த மயூரி நரீ என்கிற சரக்குக் கப்பல் ஹோர்முஸ் நீரிணையை நெருங்கியபோது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த நிலையில், கச்சா எண்ணெய்யின் விலை மீண்டும் பீப்பாய் 100 டாலரைக் கடந்துள்ளதால், பெட்ரோல், டீசல் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது,

இந்தியாவில் பீப்பாய் 130 டாலரைக் கடக்கும் வரை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டாம் என்று எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# எல்பிஜி தட்டுப்பாடு: ரயில்களில் உணவு வழங்குவதில் சிக்கல்?

**புதுடெல்லி, மார்ச் 13:**




நாடு முழுவதும் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் ரயில்களிலும் உணவு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் - ஈரான் இடையேயான போரால் இந்தியாவுக்கு வரும் கச்சா எண்ணெய்தடைபட்டுள்ளதால் நாடு முழுவதும் எல்பிஜி சிலிண்டர் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

எல்பிஜி உற்பத்தியை அதிகரிக்கவும் வீட்டு உபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை அளிக்கவும் எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. எனினும் பல்வேறு இடங்களில் கேஸ் சிலிண்டர் பெறவும் பெட்ரோல் நிலையங்களில் ஆட்டோக்கள் கேஸ் நிரப்பவும் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நேற்று முதலே உணவக நிறுவனங்கள் தங்கள் தொழிலைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவித்து வருகின்றன. பல ஹோட்டல்களில் உணவு வகைகள் குறைக்கப்பட்டு விலையேற்றம் செய்யப்படுகிறது. இதனால் மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ரயில்களிலும் உணவு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நீண்ட தூரம் செல்லும் ரயில்கள், வந்தே பாரத் போன்ற அதிநவீன ரயில்களில் பயணிகளுக்கு ரயில்வே நிர்வாகம் சார்பில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல மற்ற ரயில்களிலும் பயணிகளின் விருப்பத்திற்கேற்ப உணவு பெறலாம்.

தற்போது எரிவாயு தட்டுப்பாட்டால் ரயில்களில் உணவு கொடுக்க ஒப்பந்த நிறுவனங்கள் சிரமப்படுகின்றன. ரயில் நிலையங்களில் உணவு விற்பனை செய்யும் கடைகளுக்கும் இதே நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து ரயில்களில் பயணிகளுக்கு உணவு வழங்கும் ஒப்பந்த நிறுவனங்கள், ரயில் நிலையங்களில் உள்ள உணவு விற்பனைக் கடைகளுக்கு ஐஆர்சிடிசி சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. கேஸ் சிலிண்டருக்குப் பதிலாக மைக்ரோவேவ் ஓவன், இன்டக்ஷன் ஸ்டவ் ஆகியவற்றைப் பயன்படுத்தவும் சமைத்த உணவுகளை இருப்பில் வைக்கவும், உணவு இருப்பு இல்லை என்றால் பயணிகளின் கோரிக்கைக்கு ஏற்ப பேக்கிங் செய்யப்பட்ட உணவுப் பொருள்களை வழங்கவும் அறிவுறுத்தியுள்ளது.

# திருப்பதி அலிபிரி சோதனை சாவடியில் கட்டுக்கட்டாக பணத்துடன் சிக்கிய நபர்- போலீசார் தீவிர விசாரணை

**திருப்பதி, மார்ச் 13:**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தை சேர்ந்தவர் நீலமேகம் (வயது 62). திருப்பதி கொர்லகுண்டாவை சேர்ந்தவர் வெங்கடேஷ் (29). இருவரும் நேற்று திருப்பதி மலைக்கு செல்வதற்காக காரில் அலிபிரி சோதனைச் சாவடிக்கு வந்தனர்.

சோதனைச் சாவடியில் இருந்த விஜிலென்ஸ் அதிகாரிகள் காரை சோதனை செய்தனர். அப்போது காரில் இருந்த ஒரு பையில் ரூ.65 லட்சம் இருந்தது. பணத்தை பறிமுதல் செய்த விஜிலென்ஸ் அதிகாரிகள் அதை அலிபிரி போலீசில் ஒப்படைத்தனர். அலிபிரி போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமகிருஷ்ணா இருவரிடமும் தனித்தனியாக விசாரணை நடத்தினார். விசாரணையில் இந்த பணம் சென்னையை சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானது என தெரிவித்தனர்.

விசாரணைக்கு பின் பறிமுதல் செய்யப்பட்ட பணம் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில்:

டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூர் உள்ளிட்ட முக்கிய நகரங்களை சேர்ந்தவர்கள் திருப்பதி மலைக்கு வந்து தங்க நாணயங்களை வரியில்லாமல் வாங்கிச் செல்கின்றனர். இதனை பல்வேறு நகரங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து 15 சதவீத கமிஷன் பெற்று வருகின்றனர்.

இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.50 முதல் ரூ.60 கோடி வரை பண பரிமாற்றம் நடைபெறுவதாக தெரிவித்தனர். பிடிபட்டவர்களும் அந்த கும்பலை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# எரிபொருள் தட்டுப்பாடு! செல்போன் டவர், இணைய சேவை பாதிக்கும் அபாயம்!

**புதுடெல்லி, மார்ச் 13:**

எரிபொருள் தட்டுப்பாடு நீடித்தால் செல்போன் வலையமைப்பு, இணைய சேவைகள் பாதிக்கப்படலாம் என்று தொலைத்தொடர்பு நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மத்திய கிழக்கு போர்ப் பதற்றம் காரணமாக வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் எரிபொருள்கள் தடைப்பட்டுள்ளது. இதன்காரணமாக கடந்த மூன்று நாள்களாக நாடு முழுவதும் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து, ஹோட்டல்கள், கடைகள் உள்ளிட்டவைக்கு வழங்கப்படும் வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்கள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளன.

வீட்டு உபயோகப் பயன்பாட்டுக்கும், அத்தியாவசியதேவைகளுக்கு மட்டுமே சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பு நிறுவனங்களுக்கும் கடந்த மார்ச் 5 ஆம் தேதி முதல் சிலிண்டர் விநியோகத்தை எண்ணெய் நிறுவனங்கள் நிறுத்தியுள்ளன. இதனால், புதிய தொலைத்தொடர்பு கோபுரங்களை (டவர்) தயாரித்துநிறுவுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், இதே நிலை தொடரும் பட்சத்தில் விரைவில் படிப்படியாக டவர் தயாரிப்புகள் குறைக்கப்படும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு கோபுரங்கள் பல உலோக செயலாக்க தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன. உலோகத்தை சூடாக்கவும், கோபுரங்களின் பாகங்கள் துரு மற்றும் சேதங்களில்இருந்துபாதுகாக்க பூச்சு பூசுவதற்கு எரிவாயு அத்தியாவசிய தேவையாக இருக்கின்றன. இதுதொடர்பாக மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகத்துக்கு டிஜிட்டல் உள்கட்டமைப்புவழங்குநர்கள் சங்கம் எழுதியிருக்கும் கடிதத்தில் டவர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு தேவையான எல்பிஜி, எல்என்ஜிவகைஎரிவாயுகளை சீராகவிநியோகிக்ககோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### எல்பிஜி சிலிண்டர் நெருக்கடி

# நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்




**புதுடெல்லி, மார்ச் 13:**

நாடு முழுவதும் எல்பிஜி சிலிண்டர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் அது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி மக்களவையில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இதனால், அவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் மூத்த தலைவர் பிரியங்கா காந்தி உள்ளிட்ட எம்பிக்கள் இதில் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்பி கே.சி. வேணுகோபால், “வணிக பயன்பாட்டுக்கு எல்பிஜி சிலிண்டர்களை வழங்க வேண்டாம் என்று எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் வந்துள்ளது. நிலைமை நாள்தோறும் மோசமாகிறது. மத்திய அரசு நாட்டு மக்களிடம் பொய்களைக் கூறி வருகிறது” என குற்றம் சாட்டினார்.

மற்றொரு காங்கிரஸ் எம்.பி. கே. சுரேஷ், “நாட்டில் CNG நெருக்கடி மிகவும் தீவிரமாக உள்ளது. உண்மையான நிலையை அரசு வெளிப்படுத்தவில்லை. பல ஹோட்டல்கள் மற்றும் தொழில்கள் மூடப்பட்டுள்ளன. நிலைமை மிகவும் மோசமாக இருந்தாலும், கவலைப்பட வேண்டியதில்லை என்று அரசு கூறுகிறது.

ஆனால் ஹோட்டல் மற்றும் உணவக உரிமையாளர்கள் நிலைமை தீவிரமாக இருப்பதாகக் கூறுகின்றனர். அரசு மக்களை தவறாக வழிநடத்துகிறது” என குறிப்பிட்டார்.

# சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிரான தீர்மானம் தோல்வி

**புதுடெல்லி, மார்ச் 13:**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியடைந்தது.

மக்களவையில் கடும் அமளி மற்றும் முழக்கங்களுக்கு இடையே, அவையை நடத்திக் கொண்டிருந்த ஜெகதாம்பிகா பால், சபாநாயகரை நீக்கக் கோரும் தீர்மானம் தோல்வியடைந்ததை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். முன்னதாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர். தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த ஒத்துழைக்குமாறும், உறுப்பினர்கள் தங்களது இருக்கைகளுக்குத் திரும்புமாறும் ஜெகதாம்பிகா பால் வேண்டுகோள் விடுத்தார். எனினும், அமளி தொடர்ந்ததால் குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மக்களவை மற்றும் மாநிலங்களவை அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

# ராகுல் மீது அமித் ஷா தாக்கு

**புதுடெல்லி, மார்ச் 13:**

நாடாளுமன்ற விவாதத்தின் போது பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தியை கடுமையாக விமர்சித்தார். அப்போது அவர் கூறுகையில், “ ராகுல் காந்தி கட்சிப் பணிகளுக்காகப் பல்வேறு இடங்களுக்கு, வெளிநாடுகளுக்கு செல்கிறார். ஆனால் குடியரசுத் தலைவர் உரை, மத்திய பட்ஜெட் தாக்கல் மற்றும் 370-வது சட்டப்பிரிவு தொடர்பான முக்கிய விவாதங்களின் போது ராகுல் காந்தி அவையில் இருப்பதில்லை. முக்கியமான கூட்டத் தொடர்களின் போது வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டு, பின்னர் தமக்கு பேச வாய்ப்பளிக்கப் படுவதில்லை என்று குற்றம் சாட்டுகிறார். மக்களவையைப் பொருத்தவரையில் காங்கிரஸ் 175 மணி நேரத்துக்கும் மேலாக பேசியுள்ளது. அப்போது எந்த சபாநாயகர் உங்களை தடுத்தார் ? 17-வது மக்களவையில் ராகுல் காந்தியின் வருகை 51 சதவீதமாகவும் (சராசரி 66%), 16-வது மக்களவையில் 52 சதவீதமாகவும் (சராசரி 80%) மட்டுமே இருந்துள்ளது என்றார்.

# தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது பதவி நீக்கத் தீர்மானம்: எதிர்க்கட்சிகள் ஆதரவு

**புதுடெல்லி, மார்ச் 13:**

மேற்கு வங்க மாநிலத்தில் வரும் ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு கடந்த ஆண்டு டிசம்பரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) தேர்தல் ஆணையத்தால் மேற்கு வங்கத்தில் தொடங்கப்பட்டன. இந்நிலையில் இந்த எஸ்ஐஆர் பணியில் முறைகேடுகள் நடை பெற்றுள்ளதாகவும், இதற்குத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார்தான் காரணம் என்றும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி புகார் கூறி வருகிறது. இதைத் தொடர்ந்து அவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தை திரிணமூல் காங்கிரஸ், மாநிலங்களவையில் கொண்டு வரும் என்று கட்சி எம்.பி.சவுகதா ராய் நேற்று அறிவித்தார். எஸ்ஐஆர் பணியின் காரணமாக 59 லட்சம் உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்துநீக்கப்பட்டுள்ளன என்றும் அவர் புகார் தெரிவித்தார். இந்நிலையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் முடிவை வரவேற்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர் உதித் ராஜ், எம்.பி.சுக்தேவ் பகத் உள்ளிட்டோர் தெரிவித்துள்ளனர். திரிணமூல் காங்கிரஸ் கொண்டு வரும் தீர்மானத்துக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆதரவு அளிக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பூர்ணியா தொகுதி சுயேச்சை எம்.பி.யான பப்பு யாதவ், சமாஜ்வாதி எம்.பி.தர்மேந்திர யாதவ் உள்ளிட்டோரும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் முடிவுக்கு பாஜக மூத்த தலைவர்கள் அனுராக் தாக்குர், முக்தார் அப்பாஸ் நக்வி, மத்திய அமைச்சர் சுகந்தா மஜூம்தார் உள்ளிட்டோர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# “வதந்திகளை நம்பி, மக்கள் தேவையின்றி பீதியடைய வேண்டாம்” - இந்துஸ்தான் பெட்ரோலியம் வெளியிட்ட முக்கிய தகவல்

**புதுடெல்லி, மார்ச் 13:**

ஈரான் - இஸ்ரேல் மோதல்களால் ஏற்பட்ட பதற்ற நிலையால், கடந்த சில நாட்களுக்கு முன் நாட்டில், சமையல் கியாஸ் சிலிண்டர் விலை ரூ.60 வரை உயர்ந்தது. வர்த்தக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர் விலை ரூ.115 உயர்ந்தது. இதனால், மக்கள் அதிர்ச்சியடைந்து உள்ளனர். எனினும், இந்தியாவுக்கு கியாஸ் சிலிண்டர்களை விற்பனை செய்வதற்காக அல்ஜீரியா, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் நார்வே நாடுகள் அணுகியுள்ளன என அரசு வட்டாரம் தெரிவித்து உள்ளது. இந்நிலையில் அடுத்து நாட்டில், பெட்ரோல் மற்றும் டீசல் விலை எப்போது வேண்டுமென்றாலும் உயர கூடும் என்ற அச்சம் வாகன ஓட்டிகளிடையே காணப்படுகிறது. இது எப்போது நடைபெறும்? அதற்கான சாத்தியம் என்ன? என்பது பற்றி அரசு வட்டாரங்கள் தகவல் தெரிவித்து உள்ளன. இதன்படி, பீப்பாய் ஒன்றிற்கு 130 அமெரிக்க டாலர் அல்லது அதற்கு கூடுதலாக கச்சா எண்ணெய் விலை உயரும்போது, பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்வதற்கான சாத்தியம் உள்ளது. ஆனால், நாட்டில் எந்த பெட்ரோல் பல்க்கிலும் பெட்ரோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு இல்லை என தகவல் தெரிவிக்கின்றது. இந்நிலையில் வதந்திகளை நம்பி, மக்கள் தேவையின்றி பீதியடைய வேண்டாம் இந்துஸ்தான் பெட்ரோலியம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:- நாடு முழுவதும் உள்ள அனைத்து HPCL சில்லறை விற்பனை நிலையங்களும் (எரிபொருள் நிலையங்கள்) முழுமையாக வழக்கம் போல் செயல்பட்டு வருகின்றன. பெட்ரோல், டீசல் மற்றும் பிற எரிபொருள்கள் போதுமான அளவு விநியோகிக்கப்படுகின்றன மற்றும் விநியோகம் சீராக தொடர்ந்து வருகிறது. வாடிக்கையாளர்கள் வதந்திகளுக்கு கவனம் செலுத்த வேண்டாம். பீதியடைந்து வாங்குவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## போலீஸ் அதிகாரி என மிரட்டி ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியிடம் ரூ.1 கோடி பறிப்பு




**சென்னை, மார்ச்.13:** தீவிரவாத தடுப்புப் பிரிவு போலீஸ் அதிகாரி என சைபர் மோசடி கும்பல் மிரட்டி, ஓய்வு பெற்ற வங்கி அதிகாரியிடம் ரூ.1 கோடி பறித்துள்ளது. இந்த வழக்கில் முகவராக செயல்பட்ட செல்போன் வியாபாரி கைது செய்யப்பட்டார்.

சென்னை நொளம்பூரில் வசிப்பவர் ஓய்வுபெற்ற வங்கி மேலாளர் சத்தியமூர்த்தி (60). இவருக்கு கடந்தாண்டு நவ.27-ம் தேதி போன் அழைப்பு ஒன்று வந்தது. எதிர்முனையில் பேசிய நபர், தன்னை தீவிரவாத தடுப்புப் பிரிவு போலீஸ் அதிகாரி என அறிமுகம் செய்துகொண்டார்.

அவர், "என்ஐஏ அதிகாரிகள் கொடுத்த ரகசிய அறிக்கைப்படி, நீங்கள் பாதுகாப்பான தகவல்களை தீவிரவாதிகளுக்கு கொடுத்து பணப் பலன்களை பெற்றுள்ளீர்கள். எனவே உங்களை டிஜிட்டல் முறையில் கைது செய்துள்ளோம்.

விசாரணை முடியும் வரை நீங்கள் வீட்டைவிட்டு வெளியேறினாலோ, இதை வெளியே சொன்னாலோ உங்கள் வீட்டுக்கு வெளியே தயார் நிலையில் உள்ள போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்துவிடுவார்கள்.

மேலும் இது தொடர்பான தகவல்கள் ஊடகங்களுக்கு கொடுக்கப்பட்டு வெளியிடப்படும். இப்படி நடக்கக் கூடாது என்றால் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தாருங்கள்" என தெரிவித்தார்.

மேலும், "நீங்கள் நிரபராதி என நிரூபிக்க உங்களது வங்கிக் கணக்கில் உள்ள மொத்த பணத்தையும் நாங்கள் கூறும் வங்கிக் கணக்குக்கு அனுப்பிவைக்கவும். அதை சரிபார்த்த பின்னர், உங்கள் மீது தவறு இல்லை என்றால் பணத்தை திருப்பி அனுப்பிவிடுவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, சத்தியமூர்த்தி தன்னை நிரபராதி என நிரூபிக்க தனது வங்கிக் கணக்கில் இருந்த ரூ.1 கோடியே 7 ஆயிரத்தை அனுப்பி வைத்தார். அதன் பிறகு எதிர்தரப்பினரை தொடர்புகொள்ள முடியவில்லை.

தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த சத்தியமூர்த்தி, இது தொடர்பாக சென்னை சைபர் க்ரைம் போலீஸாரிடம் புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் மோசடி செய்யப்பட்ட பணம் பல மாநிலங்களுக்கு அடுத்தடுத்து மாற்றப்பட்டது தெரியவந்தது.

மேலும் சைபர் க்ரைம் மோசடி கும்பல் சென்னை மண்ணடி, ராமசாமி தெருவைச் சேர்ந்த அஜருதீன் (40) என்பவரது வங்கிக் கணக்கை பயன்படுத்தி, அந்த கணக்கில் சத்தியமூர்த்தியை பணம் போட வைத்துள்ளனர். இதையடுத்து அஜருதீன் கைது செய்யப்பட்டார்.

இவர் பர்மா பஜாரில் மின்னணு பொருட்கள் விற்பனை மற்றும் மொபைல் போன் வியாபாரம் செய்துவந்தது தெரியவந்தது. மேலும் அவர் 40-க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகளை மோசடி கும்பல் பயன்படுத்த கொடுத்து 3 சதவீத கமிஷன் பெற்றுவந்துள்ளார்.

இப்படி சைபர் க்ரைம் மோசடி கும்பலிடம் இதுவரை ரூ.1.2 லட்சம் கமினரான பெற்றுள்ளார். இதையடுத்து அவரை போலீஸார் சிறையில் அடைத்தனர். இந்த மோசடிக்கு மூளையாகச் செயல்பட்ட மோசடி கும்பலை தனிப்படை போலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

## சென்னையில் ப்ராஜெக்ட் பணிக்காக வந்த திருச்சி மாணவியை காரில் கடத்தி பாலியல் வன்கொடுமை!



**சென்னை, மார்ச்.13:** சென்னையில் ப்ராஜெக்ட் பணிக்காக வந்த திருச்சி மாணவியை காரில் கடத்தி பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 22 வயது மாணவி ப்ராஜெக்ட் பணிக்காக கடந்த பிப்ரவரி 14 ஆம் தேதி சென்னை வந்துள்ளார். அவர் அடையார் பகுதியில் உள்ள பெண்கள் விடுதியில் தங்கி ப்ராஜெக்ட் செய்து வந்ததாக கூறப்படுகிறது.

சென்னைக்கு வந்த சில நாள்களிலேயே, அவரது செல்போனுக்கு அடையாளம் தெரியாத நபர் ஒருவர் மார்பிங் செய்யப்பட்ட புகைப்படத்தை வாட்ஸ்ஆப் மூலம் அனுப்பியதாகவும், அந்த புகைப்படத்தை நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அனுப்பிவிடுவேன் என மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த 9 ஆம் தேதி ரேப்பிடோ புக் செய்து வெளியே காத்திருந்தபோது, அடையாளம் தெரியாத காரில் வந்த நான்கு பேர் அவரை கட்டாயமாக இழுத்து காரில் ஏற்றியதாக கூறப்படுகிறது. அப்போது முகத்தில் மயக்கப் பொடி பூசியதால் அவர் மயங்கி விட்டதாகவும், ஒரு மணி நேரத்திற்கு பிறகு அவரை வேறு இடத்தில் இறக்கிவிட்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

பின்னர் உடல் நிலையில் மாற்றம் உணர்ந்ததால், 10 ஆம் தேதி மாலை அடையாரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக கூறப்படுகிறது. மருத்துவமனையில் இருந்து வெளியே வந்தபோது மீண்டும் மூன்று பேர் காரில் ஏற்றி, நடந்ததை வெளியே சொன்னால் மார்பிங் புகைப்படத்தை இணையத்தில் வெளியிடுவோம் என மிரட்டி, இறக்கிவிட்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து அந்த மாணவி புதன்கிழமை அபிராமபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். புகாரின் உண்மை தன்மை குறித்தும் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## துறைமுகம் - மதுரவாயல் 2 அடுக்கு மேம்பாலப் பணி 2027-ல் நிறைவடையும்: தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரி தகவல்



**சென்னை, மார்ச்.13:** சென்னை துறைமுகம் - மதுரவாயல் 2 அடுக்கு மேம்பாலப் பணிகள் 2027-ம் ஆண்டில் நிறைவடையும் என்று தேசிய நெடுஞ்சாலை ஆணைய மண்டல அலுவலர் வீரேந்தர் சாம்பியால் தெரிவித்தார்.

சென்னை துறைமுகம் - மதுரவாயல் இடையே 21 கி.மீ. தூரம் கொண்ட புதிய 4 வழித்தட 2 அடுக்கு மேம்பாலப் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

இதுகுறித்து, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மண்டல அலுவலர் வீரேந்தர் சாம்பியால் கூறியதாவது: தொடக்கத்தில் ஒற்றை அடுக்காக திட்டமிடப்பட்ட இப்பாலம், மாநில அரசின் கோரிக்கையை ஏற்று, 2 அடுக்காக மாற்றப்பட்டுள்ளது.

உள்ளூர் நகரப் போக்குவரத்துக்காக முதல் அடுக்கு, சென்னை துறைமுகத்துக்கு செல்லும் கனரக சரக்கு வாகனங்களுக்காக பிரத்யேகமாக 2-வது அடுக்கு அமைக்கப்படுகிறது.

நகரின் முக்கிய பகுதிகளில் வாகனங்கள் பாலத்தில் ஏறவும், இறங்கவும் வசதியாக 13 சாய்தளங்கள் அமைக்கப்படுகின்றன. நேப்பியர் பாலம் பகுதியில் அதிநவீன கேபிள் பாலம் அமைக்கப்படுகிறது.

போக்குவரத்து போலீஸார் அனுமதியுடன் பகலில் 5 மணி நேரம், இரவில் 6 மணி நேரம் என தினமும் 11 மணி நேரம் கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன.

இதை 16 மணி நேரமாக அதிகரிக்க மாநில அரசிடம் அனுமதி கேட்டுள்ளோம். 2027 டிசம்பருக்குள் திட்டம் நிறைவடையும்.

சென்னை - பெங்களூரு விரைவுச் சாலை (262 கி.மீ.) திட்டத்தில் கர்நாடகப் பகுதி பணிகள் முடிந்துவிட்டன. தமிழகத்தில் உள்ள 106 கி.மீ. தொலைவில் 3 தொகுப்புகளின் பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

தமிழகத்தில் நெடுஞ்சாலை உள்கட்டமைப்பை மேம்படுத்த, கடந்த 10 ஆண்டுகளில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ரூ.60 ஆயிரம் கோடிக்கு மேல் முதலீடு செய்துள்ளது.

தற்போது ரூ.40 ஆயிரம் கோடி மதிப்பிலான பணிகள் நடைபெறுகின்றன. தமிழகத்தில் 77 இடங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலை ஆணைய சுங்கச் சாவடிகள் மூலம் கடந்த நிதி ஆண்டில் ரூ.4,300 கோடி வசூலானது. இவ்வாறு அவர் கூறினார்.

ஆணையத்தின் சென்னை திட்ட இயக்குநர் சிவம் சர்மா கூறும்போது, "பிரம்மாண்டமான வார்ப்புத் தளங்களில் பாலத்தின் கான்கிரீட் பாகங்கள் முன்கூட்டியே முழுவீச்சில் தயாரிக்கப்படுகின்றன. இதனால், மழைக்காலத்திலும் இடையூறின்றி மேம்பால கட்டுமானப் பணி நடைபெறும்" என்றார்.

## எரிபொருள் விலை உயர்வு காரணமாக ஏர் இந்தியா விமான கட்டணம் அதிகரிப்பு




**சென்னை, மார்ச்.13:** ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் போர் காரணமாக, விமான எரிபொருள் விலை அதிகரித்துள்ளதால், ஏர் இந்தியா நிறுவனம் விமானக் கட்டணங்களை உயர்த்தியுள்ளது. இந்த கட்டண உயர்வு இன்று முதல் அமலுக்கு வருகிறது.

இது தொடர்பாக ஏர் இந்தியா விமான நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

3 கட்டமாக கட்டணம் உயர்வு

உள்நாடு மற்றும் சர்வதேச விமானங்களின் பயணிகள் கட்டணம் 3 கட்டமாக அதிகரிக்கப்படுகிறது.

அதன்படி, முதல் கட்டமாக மார்ச் 12-ம் தேதி (இன்று) அதிகாலை முதல் உள்நாடு மற்றும் சார்க் நாடுகளான இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூடான் செல்லும் சர்வதேச விமானங்களுக்கு ரூ.399 கட்டணம் உயர்த்தப்படுகிறது.

பயணிகள் அதிர்ச்சி

மேற்கு ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளுக்கு 10 அமெரிக்க டாலர் (ரூ.920), தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு 20 டாலர் (ரூ.1,840), ஆப்பிரிக்க நாடுகளுக்கு, 30 டாலர் (ரூ.2,760) கட்டணம் உயர்த்தப்படுகிறது.

இந்தியாவில் இருந்து சிங்கப் பூருக்கு இயக்கப்படும் விமானங்களுக்கு எரிபொருள் கட்டணம் வசூலிக்கப்படாமல் இருந்தது. இனிமேல் அந்த கட்டணம் வசூலிக்கப்படும்.

2-ம் கட்ட கட்டண உயர்வு 18-ம் தேதி அதிகாலை முதல் அமலாகும். ஐரோப்பிய நாடுகளுக்கு 25 டாலர் (ரூ.2,300), வட அமெரிக்காவுக்கு, 50 டாலர் (ரூ.4,594), ஆஸ்திரேலியாவுக்கு 50 டாலர் (ரூ.4,594) கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

3-ம் கட்டமாக, ஜப்பான், ஹாங்காங், தென்கொரியா செல்லும் ஏர் இந்தியா விமானங்களுக்கான கட்டண உயர்வு குறித்து பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஏர் இந்தியாவை தொடர்ந்து, மற்ற நிறுவனங்களும் கட்டணத்தை உயர்த்த முடிவு செய்துள்ளதால், விமானப் பயணிகள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## சென்னையில் மின்சார குளிர்சாதன பிரீமியம் பேருந்துகள்: அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைத்தார்



**சென்னை, மார்ச்.13:** அதிநவீன வசதி மற்றும் தரமான பயண அனுபவத்தை வழங்க குளிர்சாதன பிரீமியம் பேருந்து சேவையை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கிவைத்தார்.

மாநகர் போக்குவரத்துக் கழகம் தற்போது சாதாரண (விடியல் பயணம்), விரைவு, சொகுசு, குளிர்சாதன மற்றும் மின்சாரப் பேருந்து சேவைகள் மூலம் தினமும் லட்சக்கணக்கான பயணிகளுக்கு சேவை செய்து வருகிறது.

எனினும் சென்னை மாநகரில் பணிபுரியும் அலுவலகப் பயணிகள், தினசரி பயணிகள் சிலர் அதிக வசதியுடனும் விரைவான பயண சேவையை விரும்புகின்றனர்.

மேலும் மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்து பயணிகளிடையே சேவைகள் குறித்த ஆய்வு 'சென்னை ஒன்' செயலி மூலம் மேற்கொள்ளப்பட்டபோது, குறித்த நேரப் பயணம், சொகுசான மற்றும் உறுதி செய்யப்பட்ட இருக்கை வசதி, கூட்ட நெரிசல் இல்லா பயணம், நம்பகமான மற்றும் பாதுகாப்பான பயணம், மின்சாரப் பேருந்துகள் போன்றவை குறித்து கருத்துகள் கேட்டறியப்பட்டன.

இதைக் கருத்தில் கொண்டு, தனியார் வாகனப் பயன்பாட்டைக் குறைக்கவும், தனியார் வாகனங்களிலிருந்து பொதுப் போக்குவரத்துக்கு மாறுவதை ஊக்குவிக்கவும், நெரிசல் மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைக்கவும், பொதுப் போக்குவரத்துக் கான ஈர்ப்பை அதிகரிக்கும் வகையிலும், சென்னை மாநகரின் முக்கிய மற்றும் அதிக பயணிகள் பயன்பாடுள்ள வழித்தடங்களில் பிரீமியம் பேருந்து சேவையை மாநகர் போக்குவரத்துக் கழகம் அறிமுகப்படுத்த திட்டமிட்டு, முதற் கட்டமாக 40 கி.மீ.க்கும் அதிகமான நீளம் கொண்ட கிளாம்பாக்கம் முதல் திருவான்மியூர் வரை P91 மற்றும் கோயம்பேட்டில் இருந்து சிறுசேரி ஐடி பூங்கா வரை P570S என இரு வழித்தடங்களில் 5 பேருந்துகள் பரீட்சார்த்த முறையில் இயக்கப்படவுள்ளது.

இந்த தாழ்தள குளிர்சாதன மின்சாரப் பேருந்துகளைக் கொண்ட பிரீமியம் பேருந்து சேவையை நேற்று போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

இந்த பிரீமியம் பேருந்து சேவையின் குறைந்தபட்ச கட்டணம் ரூ.50 முதல் அதிகபட்சம் ரூ.150 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய பேருந்துகளில் 5 நாட்களுக்கு முன்னதாகவே ஆன்லைன் மூலம் கட்டணம் செலுத்தி இருக்கைகளை முன்பதிவு செய்துகொள்ளும் வசதி இருக்கும்.

மேலும் சொகுசான அதிக இட வசதி கொண்ட இருக்கைகள், ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பேருந்தின் நிகழ்நேர பயணத்தை கண்காணித்தல், இலவச வைஃபை, மொபைல், லேப்டாப் சார்ஜிங், சிசிடிவி மற்றும் அவசர அழைப்பு வசதி, மாற்றுத் திறனாளி பயணிகள் எளிதாகப் பயணம் மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த பேருந்தில் நடத்துநர் இருக்க மாட்டார்கள், நின்று கொண்டு பயணிக்கவும் அனுமதியில்லை. இந்நிகழ்ச்சியில், மாநகர் போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர் பிரபுசங்கர், இணை மேலாண் இயக்குநர் ராம. சுந்தரபாண்டியன், பொது மேலாளர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## சைபர் குற்றங்களைத் தடுக்கும் சைபர் செக்யூரிட்டி படிப்புகள்!




**சென்னை, மார்ச்.13:** கணினி வழி குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், அதைத் தடுக்கும் வகையிலான புதிய தொழில்நுட்ப படிப்புகளுக்கு உலகம் முழுவதும் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இதை அடிப்படையாகக் கொண்டு, இணையவழி பணம் திருட்டு, தகவல் திருட்டு, தகவல்களை அழிப்பதைத் தடுப்பது உள்ளிட்ட தொழில்நுட்பங்களை கற்றுத் தரும் வகையில் சைபர் செக்யூரிட்டி படிப்புகள் வழங்கப்படுகின்றன.

டிப்ளமோ முதல் பிஎஸ்சி, பிடெக் என பல்வேறு பிரிவுகளிலும் சைபர் செக்யூரிட்டி படிப்புகள் வந்துவிட்டன.

பிளஸ் 2-வில் கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களைத் தேர்ந்தெடுத்து படித்தவர்கள் இந்த படிப்பில் சேரலாம்.

சைபர் குற்றங்கள், இந்திய சைபர் தடுப்புச் சட்டங்கள், உலகளாவிய சைபர் குற்றங்கள், தீர்வுகள், கணிவழி குற்றங்களை ஆய்வறிந்து தடய அறிவியல், தகவல் பாதுகாப்பு முறைகளை மேம்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து பாடத்திட்டத்தில் கற்பிக்கப்படுகிறது. இதுதவிர செயல்முறைக் கல்வியும் இணைக்கப்பட்டுள்ளது.

சைபர் செக்யூரிட்டி முடித்தவர்களுக்கு சர்வதேச அளவில் வேலைவாய்ப்புகள் அதிகளவில் உள்ளன.

வங்கிகள், நிதித் துறை, தகவல் பாதுகாப்புத் துறை, தரவு பாதுகாப்பு நிறுவனங்கள், மென்பொருள் நிறுவனங்கள், மருத்துவம், காவல் துறை, சைபர் தடய அறிவியல் துறை, தகவல் ஆடிட்டிங் துறை உள்பட பல்வேறு துறைகளிலும் வேலைவாய்ப்பு உள்ளன.

## பெட்ரோல், டீசல் விலை உயர்வு வதந்தி: சென்னையில் பெட்ரோல் நிலையங்களில் குவிந்த வாகன ஓட்டிகள்!

**சென்னை, மார்ச்.13:** பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு வதந்தி காரணமாக, தமிழகம் முழுவதும் பெட்ரோல் நிலையங்களில் வாகன ஓட்டிகள் குவிந்ததால் பரபரப்பு நிலவியது.

தற்போது அமெரிக்கா- இஸ்ரேல், ஈரான் இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக இந்தியாவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

இதனிடையே, குவைத், கத்தார், சவுதிஅரேபியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சமையல் எரிவாயு உற்பத்திக்கான திரவ சுத்திகரிக்கப்பட்ட கச்சா எண்ணெய் இறக்குமதி தடைபட்டுள்ள நிலையில், அதன் இருப்பும் மிகவும் குறைவாகவே உள்ளது.

இதனால், நாடு முழுவதும் சமையல் எரிவாயு உருளைகள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வீடுகளுக்கான சமையல் எரிவாயு உருளைகளை தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும் என்ற மத்திய அரசின் அறிவிப்பால், வணிக பயன்பாட்டுக்கான எரிவாயு உருளைகளின் உற்பத்தியை பெரும்பாலான எரிவாயு உற்பத்தி நிறுவனங்கள் முற்றிலுமாக நிறுத்தியுள்ளன.

இதன்காரணமாக சென்னை சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள உணவகங்கள், பேக்கரிகள், தேநீர் கடைகளுக்கு சமையல் எரிவாயு உருளைகள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பல ஹோட்டல்கள், கையிருப்பில் உள்ள எரிவாயு உருளைகள் மூலம் கடந்த இரு நாள்களாக உணவு பொருள்களை தயாரித்தன. பல்வேறு இடங்களில் கையிருப்பில் உருளைகள் வைத்திராத சிறிய, பெரிய உணவகங்கள், பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன. பல உணவகங்களில் விறகு மற்றும் மின்சார அடுப்புகளுக்கு மாறத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில், வளைகுடா நாடுகளில் போர் காரணமாக , தமிழகத்தில் கடந்த இரண்டு நாள்களாக நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நெருக்கடிக்கு மத்தியில் நாளை முதல் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு மற்றும் விலை உயரப்போவதாக புதன்கிழமை இரவு சமூக ஊடகங்களில் வைரலான வதந்திகள் பரவியது. இதனால் அச்சம் அடைந்த வாகன ஓட்டிகள் தங்களது இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களுடன் பெட்ரோல் நிலையங்களில் குவிந்தனர்.

தமிழகத்தில், வேலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் நள்ளிரவு கூடியதால் வாகன ஓட்டிகள் பீதியடைந்தனர். அதேபோன்று சென்னையில் பட்டரவாக்கம் மற்றும் அய்யப்பாகம், அம்பத்தூர், ஆவடி, வில்லிவாக்கம், அண்ணாநகர் உள்ளி பல்வேறு பகுதிகளில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் புதன்கிழமை இரவு முதல் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்குவதற்காக ஏராளமானோர் வரிசையில் நின்று தங்களது வாகனங்களின் டேங்குகளை முழுவதுமாக நிரப்பிச் சென்றதாலும், கேன், பாட்டில்களில் வாங்கிச் சென்றதால் வணிக ரீதியிலான வாகன ஓட்டிகள் பீதியடைந்தனர்.

அதேநேரத்தில், நாடு முழுவதும் 90 நாள்களுக்கு போதிய அளவுக்கு எரிப்பொருள் கையிருப்பு இருப்பதால் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாது. மக்கள் பீதியடைய வேண்டாம் என தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.பி.முரளி தெரிவித்துள்ளார்.

மேலும், வதந்தியால் மக்கள் தேவைக்கு அதிகமாக பெட்ரோல், டீசல் வாங்கினால் விரைவில் காலியாகி செயற்கை தட்டுப்பாடு ஏற்படும்.

# ‘மதுர குலுங்க குலுங்க’ - 2026 மதுரை சித்திரை திருவிழா அட்டவணை வெளியானது!



**மதுரை, மார்ச்.13:** தமிழ்நாட்டின் முக்கிய திருவிழாக்களில் ஒன்றான மதுரை சித்திரை திருவிழா குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. ஆண்டுதோறும் சித்திரை மாதம் 10 கோலாகலமாக கொண்டாடப்படும் இவ்விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்வர். இந்நிலையில் இந்தாண்டுக்கான நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி ஏப்ரல் 19-ஆம் தேதி மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கொடியேற்றமும், ஏப்ரல் 26-இல் பட்டாபிஷேகமும் நடைபெறுகிறது. ஏப்ரல் 28-இல் மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணமும், 29-இல் திருத்தேரோட்டமும் நடைபெறும் என கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. விழாவின் சிகர நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் மே 1, 2026 அன்று நடைபெற உள்ளது.

# எல்லைதாண்டி மீன்பிடித்ததாக தமிழக மீனவர்கள் 5 பேர் கைது - இலங்கை கடற்படை அட்டூழியம்



**சென்னை, மார்ச்.13:** தமிழக-புதுச்சேரி மீனவர்கள் ஒவ்வொரு முறையும் கடலுக்கு செல்லும்போதுஎல்லைதாண்டி வந்ததாக கூறி இலங்கை கடற்படை, அவர்களை கைது செய்து படகுகளை பறிமுதல் செய்வதும், பலமுறை தாக்கி விரட்டியடிப்பதும் தொடர்ந்து நடந்து வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் ராமேஸ்வரத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் தனுஷ்கோடி அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி, 5 மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படையினர் அவர்களது விசைப்படகையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட உள்ளனர்.

# மத்திய அரசை கண்டித்து காலி சிலிண்டருக்கு மாலை அணிவித்து சிபிஎம் ஆர்ப்பாட்டம்




**சென்னை, மார்ச்.13:** மத்திய கிழக்கு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே 14.2 கிலோ எடை கொண்ட கியாஸ் சிலிண்டரின் விலையை மத்திய அரசு திடீரென ரூ.60 உயர்த்தி உள்ளது.

மேலும், வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை 115 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், வணிக சிலிண்டர் தட்டுப்பாடு நிலவுவதால் பல உணவகங்கள் மூடப்படும் நிலைக்கு ஆளாகியுள்ள.

வணிக சிலிண்டர் தட்டுப்பாடு நிலவும் நிலையில், மத்திய அரசை கண்டித்து கோவையில் காலி சிலிண்டருக்கு மாலை அணிவித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# ஒரே ஆண்டில் 49 மாணவர்களுக்கு டி.சி. வழங்கிய விவகாரம்: அரசு பள்ளியில் கல்வித்துறை அதிகாரிகள் விசாரணை



**கோவை, மார்ச்.13:** கோவை ஒண்டிப்புதூரில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்த பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கையானது 900 வரை இருந்த நிலையில் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. தற்போது பள்ளியில் 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை 450 மாணவர்களே படித்து வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் பள்ளியின் மாணவர் சேர்க்கை குறைந்ததற்கு அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் சில ஆசிரியர்களே காரணம் என பெற்றோர் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தனர்.

இதையடுத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நடவடிக்கையால், பள்ளிக்கு புதிய தலைமை ஆசிரியராக சாந்தி என்பவர் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நியமனம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில் பள்ளிக்கு சரியாக வராத மற்றும் தேர்வுகளில் குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களை கண்டறிந்து அந்த மாணவர்களுக்கு மாற்றுச்சான்றிதழ்(டி.சி) வழங்கி நடவடிக்கை எடுத்துள்ளார். அதன்படி பள்ளியில் 7-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் 49 மாணவர்களுக்கு டி.சி கொடுக்கப்பட்டுள்ளது தெரியவந்தது. இதில் 10 மற்றும் 12-ம் வகுப்பு தேர்வு எழுதும் 25-க்கும் மேற்பட்டவர்களுக்கும் டி.சி வழங்கியுள்ளனர்.

இந்த நடவடிக்கை அனைத்தும் ஜூலை முதல் டிசம்பர் வரை நடந்துள்ளது. டி.சி.பெற்ற மாணவர்களின் விவரங்கள் தொடர்பான தகவல்கள் அவர்களது எமிஸ் எண் மற்றும் டி.சி. வாங்கிய தேதியுடன் சமூக வலைதளத்தில் பரவியது.

டி.சி. பெற்ற மாணவர்கள் கட்டிட பணி, ஆபீஸ் பணி என வேலைக்கு செல்கின்றனர். சிலர் வீடுகளில் இருக்கின்றனர். டி.சி. வாங்கிய பெரும்பாலான மாணவர்கள் தாங்கள் சரியாக படிக்கவில்லை என கூறி பெற்றோரை அழைத்து டி.சி. வாங்கி செல்ல கூறியதாகவும், அதன்படி டி.சி. வாங்கியதாகவும் தெரிவித்தனர்.

பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கில் இதுபோன்ற செயல்களில் தனியார் பள்ளிகளை போன்று அரசு பள்ளிகளும் செயல்பட்டு வருவதாக கல்வியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஒரே ஆண்டில் 49 மாணவர்களுக்கு டி.சி. அளிக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பாக மாவட்ட கலெக்டர் விசாரித்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ள நிலையில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விசாரணையை தொடங்கியுள்ளார்.

இதுகுறித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி கூறியதாவது:-

மாணவர்களுக்கு டி.சி. வழங்கப்பட்டது என்பது தொடர்பாக பள்ளி தலைமை ஆசிரியையிடம் விளக்கம் கேட்கப்படும். அவரது விளக்கத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் 49 மாணவர்கள் டி.சி. வாங்கி சென்றுள்ள நிலையில், அந்த மாணவர்களின் விவரங்களை சேகரித்து அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுதொடர்பான விசாரணை தற்போது தொடங்கப்பட்டுள்ள நிலையில், விசாரணைக்கு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஏற்றுமதி செய்ய முடியாமல் கோவில்பட்டி கடலை மிட்டாய் தேக்கம் - உற்பத்தியாளர்கள் கவலை

**கோவில்பட்டி, மார்ச்.13:** கடலை மிட்டாய் என்றாலே அது கோவில்பட்டி தான். சந்தையில் கோவில்பட்டி கடலை மிட்டாய்க்கு என்று தனி மவுசு உண்டு. அதிலும் புவிசார் குறியீடு கிடைக்கப் பெற்ற பின்னர் வெளி மாநிலங்கள், வெளிநாடுகள் என அனைத்து இடங் களிலும் கோவில்பட்டி கடலை மிட்டாய் விற்பனை அதிகரித்துள்ளது. கோவில்பட்டி சுற்று வட்டார பகுதியில், 120 கடலை மிட்டாய் உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த 2020-ம் ஆண்டு புவிசார் குறியீடு கிடைக்கப் பெற்ற பிறகு வெளிநாடுகளுக்கு அதிக அளவு நாள்தோறும் கோவில்பட்டி கடலை மிட்டாய் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக 70 சதவீதம் வளைகுடா நாடுகளுக்கு தான் அதிகமாக ஏற்றுமதி செய்து வருகின்றனர். சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், குவைத், ஓமன், பஹ்ரைன் போன்ற நாடுகளுக்கு விமானம் மற்றும் கப்பல் மூலமாக கோவில்பட்டி கடலை மிட்டாய் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையிலான போர் காரணமாக கோவில்பட்டி கடலை மிட்டாய் ஏற்றுமதி முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல கோடி ரூபாய் மதிப்பிலான கோவில்பட்டி கடலை மிட்டாய் தேக்கமடைந்துள்ளன. இது குறித்து கோவில்பட்டி கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர் சங்கத்தின் செயலாளர் கண்ணன் கூறியதாவது:-

வளைகுடா நாடுகளுக்குத்தான் அதிகளவில் கோவில்பட்டி கடலை மிட்டாய் ஏற்றுமதி செய்து வருகிறோம். வளைகுடா நாடுகளில் நடைபெறும் போர் காரணமாக கடந்த 10 நாட்களுக்கு மேலாக கடலை மிட்டாய் ஏற்றுமதி செய்வது தடை பெற்றிருக்கிறது. ஏற்கனவே வெளிநாடுகளில் இருந்து ஆர்டர்கள் கொடுத்தவர்கள் அதனை தற்போது ரத்து செய்து வருகின்றனர். இதனால் கோவில்பட்டி கடலை மிட்டாய் உற்பத்தி முடங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பெட்ரோலிய பொருட்கள் கிடைப்பதில் சிரமம் இருப்பதால், பிபி கவர், பிளாஸ்டிக் ஜார் உள்ளிட்டவற்றின் விலைகளும் உயர்ந்துள்ளது. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும். ஏற்கனவே கடலை பருப்பின் விலை ஏற்றம் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டு அதில் இருந்து மீண்டு வரும்போது ஏற்றுமதி முடக்கம் என்பது மேலும் எங்களது தொழிலை பாதிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

கோவில்பட்டி கடலை மிட்டாய் மட்டுமின்றி கோவில்பட்டி பகுதியில் தயாரிக்கப்படும் பல்வேறு இனிப்பு மற்றும் கார வகைகளும் கோவில்பட்டி கடலை மிட்டாய் உடன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது ஏற்றுமதி தடைபட்டிருப்பதால் தொழிலாளர்கள் முற்றிலுமாக பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது.

# தமிழகத்தில் நாளை முதல் வெப்பநிலை அதிகரிக்கும்- வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, மார்ச்.13:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று மற்றும் நாளை தென்தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.



13-ந்தேதி முதல் 16-ந்தேதி வரை தென்தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

17-ந்தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதனிடையே நாளை முதல் 15-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 2° செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33-34° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34-35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.




## பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு மாணவி படுகொலை: குற்றவாளிகளை காப்பாற்ற தி.மு.க. முயற்சிக்கிறதா? - இ.பி.எஸ்.

**சென்னை, மார்ச்.11:** அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தூத்துக்குடி மாவட்டம் வேடநத்தம் பகுதியில் 12-ம் வகுப்பு மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டிருப்பதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

பாலியல் வன்கொடுமையும் , பெண்களுக்கான பாதுகாப்பின்மையும், தமிழகத்தில் தினசெய்தியாகி விட்ட நிலையில், சிறுமியைக் காணவில்லை என உறவினர்கள் காவல்துறையிடம் புகார் அளித்தும் மெத்தனப் போக்குடன் செயல்பட்டுள்ளது காவல்துறை. இந்த வெட்கக்கேடான செயல், திமுக ஆட்சியின் லட்சணத்தை வெட்டவெளிச்சமாக்கியுள்ளது.

பத்தாம் வகுப்பில் நன்கு படித்து மாவட்ட அளவில் பரிசு பெற்று, தற்போது 12-ம் வகுப்பு பயிலும் ஒரு மாணவியைக் காணவில்லை என்று புகாரளிக்க பெற்றோர் வந்தால், நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக, மிகவும் அலட்சியமாகவும், காணாமல் இருந்த பெண்ணை சந்தேகிக்கும் வகையிலும் காவல்துறை செயல்பட்டதாக வரும் தகவல்கள், திமுக ஆட்சியில் காவல்துறை எந்த அளவிற்கு பெண்கள் பாதுகாப்பில் அக்கறை இன்றி சீர்கெட்டுள்ளது என்பதை காட்டுகிறது.

குற்றவாளிகளைக் கண்டறிந்து கைது செய்ய வேண்டுமென உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றதாகவும், அவர்களிடம் காவல்துறையும், திமுக சட்டமன்ற உறுப்பினரும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் செய்திகள் வருகின்றன.

குற்றவாளிகளை உடனே கண்டறிந்து விட்டால், உறவினர்கள் போராட்டத்தை முடித்துவிடப் போகின்றனர். இதற்கு ஏன் ஒரு திமுக சட்டமன்ற உறுப்பினர் வந்து சமாதானம் பேச வேண்டும்? எதையாவது மறைக்கவோ, வழக்கை நீர்த்துப் போகச் செய்யவோ, குற்றவாளிகளை ஏதேனும் வகையில் காப்பாற்ற வேண்டும் என திமுகவோ, திமுக அரசோ முயற்சிக்கிறதா?

வேடநத்தம் பாலியல் கொலைக் குற்றத்திற்கான எச்சரிக்கை இருந்தும் அதைத் தடுக்காமலும், குற்றவாளிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்காமலும் இருக்கும் திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

வேடநத்தம் பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் தொடர்புள்ள குற்றவாளிகள் அனைவரையும் உடனடியாக கைது செய்து, அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மு.க.ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ‘எஸ்மா சட்டத்தைத் திணிக்கும் மோடி அரசு’ - திருமாவளவன் கண்டனம்

**சென்னை, மார்ச்.11:** மத்திய அரசு எஸ்மா சட்டத்தை திணிப்பதாக விசிக தலைவர் திருமாவளவன் குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ளப் பதிவில்,

“ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் தாக்கத் தொடங்கியதன் காரணமாக வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் எரிவாயு, கச்சா எண்ணெய் முதலானவை வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தியா முழுவதும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவகங்கள் மூடப்படுகின்றன. சூழ்நிலையை முன்னுணர்ந்து முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுக்காமல் இந்திய ஒன்றிய அரசு மெத்தனமாக இருந்ததே இதற்கு காரணம்.

பொதுமக்களின் நலன்களில் அக்கறை செலுத்தாமல், அரசியல் பொறுப்புணர்வோடு செயல்படாத ஒன்றிய பாஜக அரசின் போக்கை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்கு உடனடியாக போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

ஈரான் நாட்டை அமெரிக்க-இஸ்ரேலியப் படைகள் தாக்குவதற்கான தயாரிப்புகளை செய்து கொண்டிருந்தபோதே, இந்தியாவில் கச்சா எண்ணெய், சமையல் எரிவாயு மற்றும் தொழிற்சாலைகளுக்கான எரிவாயு போற்றவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று பலரும் எச்சரித்தனர். ஆனால், அந்த எச்சரிக்கைகளை மதிக்காமல் மோடி அரசு அலட்சியமாக இருந்தது. இப்போது வளைகுடா நாடுகளில் இருந்து எண்ணெய், எரிவாயு விநியோகம் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் ‘எஸ்மா சட்டத்தை’ ஒன்றிய பாஜக அரசு பிறப்பித்துள்ளது. நாடு முழுவதும் உணவகங்கள் மூடப்படுகின்றன. மாணவர் விடுதிகளில் உணவு வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வீடுகளுக்கான சமையல் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ‘சில வாரங்களுக்கு கையிருப்பு உள்ளது’ என்று ஒன்றிய அரசு சொன்னாலும் பெரும்பாலான மாநிலங்களில் சிலிண்டர் விநியோகம் செய்ய முடியவில்லை. மக்கள் சமைத்து சாப்பிடுவதற்கே திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கச் சொல்லியிருக்கிறோம் என்று மோடி அரசு சொன்னாலும் அது உடனடியாக நடக்கப் போவதில்லை. இந்தக் குழப்பங்களுக்கு மோடி அரசின் கையாலாகத்தனமே காரணம்.

கொரோனா வந்த போதும், ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவிக்கப்பட்ட போதும் இதே போலத்தான் எந்த முன்னெச்சரிக்கையும் இல்லாமல் மோடி அரசு நடந்து கொண்டது. அதனால் கொரோனாவின்போது இலட்சக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டன. இப்போதும் மோடி அரசு அதே போலத்தான் நடந்து கொள்கிறது.

நாட்டுக்கு எந்தவொரு நெருக்கடி வந்தாலும் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறை இல்லாமல் தனது கார்ப்பரேட் கூட்டாளிகளுக்கு அதில் எவ்வளவு லாபம் பார்க்கலாம் என்ற விதத்திலேயே மோடி அரசு செயல்படுகிறது. இப்போதும் கூட அமெரிக்காவில் எண்ணெய் சுத்திகரிப்பு செய்ய மோடியின் கூட்டாளி அம்பானிக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவை நெருக்கடியிலிருந்து காப்பாற்றுவதற்கு அம்பானிக்கு உதவும் மோடி அரசு இந்திய மக்களைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படவில்லை.

எஸ்மா சட்டம் பிறப்பிக்கப்பட்டதாலே எரிவாயு விநியோகம் முறையாக நடந்து விடும் என்று நம்புவதற்கு இல்லை. எஸ்மா சட்டத்தையும் தவறாகப் பயன்படுத்தவே மோடி அரசு முயற்சிக்கும். எனவே இப்படி நாடகமாடி மக்களை ஏய்ப்பதை நிறுத்திக்கொண்டு உருப்படியாக மக்களுக்கு உதவுவது எப்படி என ஒன்றிய அரசு சிந்திக்க வேண்டும்.

போர் முடிந்தாலும்கூட எரிவாயு விநியோகம் சீரடைய பல மாதங்கள் பிடிக்கலாம். எனவே, மக்களுக்கு உதவும் இடைக்கால நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்கவேண்டும். மின்சார அடுப்புகளை மானிய விலையில் கிடைக்கச் செய்யவேண்டும். கிராமப்புற மக்களுக்குக் கூடுதலாக மாதம் 10லிட்டர் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்கவேண்டும். சோலார் மின்வசதி ஏற்படுத்திக்கொள்ள உணவகங்களுக்கு மானியம் வழங்கவேண்டும்.

தேவையான இடங்களில் மையப்படுத்தப்பட்ட சமையல்கூட வசதியை உருவாக்கி இலவசமாக உணவு வழங்கவேண்டும். இவற்றுக்கான நிதிச்சுமையை வழக்கம்போல மாநிலங்களின் தலையில் கட்டாமல் எவருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்திருக்கும் ‘பிஎம் கேர்ஸ்’ நிதியிலிருந்து கொடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com